ஸ்ரீ:

## விஷய ஸூசிகை.


1. திவ்ய ப்ரபந்தம்:—ஸ்ரீ. உப. வித்வான் காரப்பங்காடு ஸிங்கப்பெருமான் ஸ்வாமி) ... ... ... .. 89
2. பகுபத்யதிகாரம்:—ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர் ... ... 97
3. பகவானுடைய ஜகத்காரணத்வம்:—(ஸ்ரீ உப. தேவனூர் விநாகம் லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்யர்) ... ... ... 107
4. மநுஸ்ம்ருதி:—(ஸ்ரீ உப. என். ஸ்ரீநிவாஸாசாரியர் பி. ஏ., பி. எல்.,) ... 109
5. உபந்யாஸங்கள்:— ... ... ... 112
6. பத்ராதிபரின் குறிப்புகள்:— ... ... ... 115
7. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—ஸ்ரீ உப. வாஸுதேவாசார்யர் ... 113
8. ஜிதந்தே ஸ்தோத்ரம்:—ஸ்ரீ. உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் ... ... ... 17


### ஸ்ரீ வை. ஸி. ஸபை சந்தா வரவு.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ. உ. வே. டி. இ. பார்த்தஸாரதி அய்யங்கார் திருநெல்வேலி | 3 | 0 | 0 |
| ,, பி. டி. திருவெங்கடாச்சாரியார், கன்னூர் | 5 | 0 | 0 |
| ,, எ. திருமலை அய்யங்கார், நாகப்பட்டணம் | 3 | 0 | 0 |
| ,, கே. வி. திருநாராயண பிள்ளை, சீகாழி | 6 | 0 | 0 |
| ,, டி. டி. ராமசாமி நாயுடு, திருப்புரம்பியம் | 3 | 0 | 0 |
| ,, ஆர். கிருஷ்ணமாச்சாரியர், ஸ்ரீரங்கம் | 2 | 0 | 0 |
| ,, என். எஸ். பார்த்தஸாரதி ஐயங்கார், நாமக்கல் | 3 | 0 | 0 |
| ,, கே. டி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், மதனப்பள்ளி | 3 | 0 | 0 |
| ,, டி. எம். ராமய்யங்கார், தாண்டகாய் | 1 | 8 | 0 |
| ,, திருவேங்கடமய்யங்கார செயளர்பட்டி | 3 | 0 | 0 |
| ,, ஆர். கோபாலஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீரங்கம் | 3 | 0 | 0 |
| ,, ஜி. திருமலை தாதாசாரியார், கடலூர் | 3 | 0 | 0 |
| ,, டி. வீரராகவ அய்யங்கார், வில்லூர் | 3 | 0 | 0 |
| ,, என். வெங்கடாசலம் அய்யங்கார், மதுரை | 3 | 0 | 0 |
| ,, மந்திரினூர் ஆர். வெங்கடஸாமி நாயகர் ராகவஸாமி வேலூர் | 3 | 0 | 0 |


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 MAR 1928
MADRAS


ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.


பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 18 ] ப்ரபவ ஹூ, தை மீ [ஸஞ்சிகை 4


த்ரிபுவனகமனம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததானே ।
வபுரலககுலாவ்ருதானனாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽனவத்யா

['ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## திவ்ய ப்ரபந்தம்.

(ஸ்ரீ. உப. வித்வான் காரப்பங்காடு ஸிங்கப்பெருமான் ஸ்வாமி)

ஆழ்வார்கள் அருளிச்செயல்களான நாலாயிரத்தின் பெருமை நிரூபிக்கப்படுகிறது. நாலாயிரமாவது: ஆழ்வார்கள் பதின்மர், ஆண்டாள், மதுரகவிகள் இவர்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்கள். அவைகளில் நம்மாழ்வாரருளிச்செயலான திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி இவைகள், ருக்வேதம், யஜுர்வேதம், அதர்வவேதம், ஸாமவேதம் ஆக நாலு வேதங்களென்று வ்யவஹரிக்கப்படும். திருமங்கையாழ்வார் அருளிச்செய்த ஆறு ப்ரபந்தங்களும் அவற்றிற்கு அங்கங்கள். மற்ற ப்ரபந்தங்கள் உபாங்கங்கள். இவைகளுக்குப் பெருமையாவது, மற்ற ப்ரமாணங்களைக்காட்டிலும் ப்ராமாண்யத்தின் உத்கர்ஷம். அந்த உத்கர்ஷம் இந்த ப்ரபந்தங்களவதரித்த க்ரமத்தாலும், அவைகளில் ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்தங்க[illegible]யு சீர்மையாலும், வக்தாக்களுடைய வைலக்ஷண்யத்தாலும் ஏ[illegible]


42
186780.
3L

ப்ரபந்தங்கள் அவதரித்த க்ரமமாவது: ஸர்வேச்வரனுடைய ஸஹஜ க்ருபா பூர்வகமான கடாக்ஷ விசேஷத்தாலே கிடைத்த பக்தி ரூபாபந்ந ஜ்ஞாநத்தாலேற்பட்ட தர்சந ஸமாநாகாரமான மாநஸாநுபவமும், அந்த மாநஸாநுபவ காலத்தில் பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து அது கிடையாமையால் மாநஸாநுபவத்திற்கு வந்த கலக்கமும் ஏற்பட்டு, அவைகளால் அபிவ்ருத்தையான பக்தியினுடைய பரீவாஹ ரூபமாய், வால்மீகி மஹர்ஷிக்கு க்ரௌஞ்ச தர்சநத்தாலுண்டான உக்தி ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே ச்லோக ரூபமாய் அது முதல் ஸ்ரீராம வ்ருத்தாந்தமான ஸ்ரீராமாயணமவதரித்து அத்தால் வேதோபப்ருஹ்மணமும் லோகோஜ்ஜீவநமும் ஏற்பட்டாற்போல், ஸர்வேச்வரனுடைய க்ருபையாலே வேதார்த்தோபப்ருஹ்மணமாயும் லோகோஜ்ஜீவநோபயோகியாயுமிருக்கிற இப்ரபந்தம் அவதரித்தது. இது எல்லா ப்ரபந்தங்களுக்கு மொக்கும். நம்மாழ்வாருடைய ப்ரபந்தங்கள் வேதரூபங்களாகையாலே, அவைகளுக்கு ப்ராமாண்யம் இதராநபேக்ஷம். வேதங்கள் அபௌருஷேயங்களாயிருப்பனபோல், நம்மாழ்வாரருளிச்செய்த ப்ரபந்தங்களுக்கு அபௌருஷேயத்வம் கூடும்படி எங்ஙனேயென்னில்: வேதம் சப்த ரூபமாகையாலே ப்ரளய காலத்தில் நஷ்டமாகி, அது ஸம்ஸ்கார ரூபங்களாக ஈச்வரனுடைய திருவுள்ளத்திலிருந்து ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே, பூர்வ கல்ப ஸித்த ஆநுபூர்விக்கு ஸஜாதீயாநுபூர்வியோடே ப்ரஹ்மாவிற்கு உபதேசிக்கப்பட, ப்ரஹ்மாவினால் மற்ற ருஷிகளுக்கும் உபதேசமேற்பட்டு, அந்த ப்ரதமோபதேசபாத்ர பூதர்களான ருஷிகளையிட்டு ஆருணம் காடகம் இத்யாதிஸம்ஜ்ஞைகள் ஏற்பட்டாற்போல், இங்கும் இந்த வேதங்களை ஸர்வேச்வரன் கல்பாதியில் ஸ்மரித்து, பூர்வ கல்ப ஸித்த ஆநுபூர்வி ஸஜாதீயாநுபூர்வி விசிஷ்டமாக நம்மாழ்வாருக்கு உபதேசிக்க, அவர் ப்ரதமாத்யேதாவாக ஏற்பட்டபடியால், ஆழ்வார் அருளிச்செய்ததாக இந்த ப்ரபந்தங்கள் வ்யவஹரிக்கப்படும். ஆதலால் அபௌருஷேயமென்றே இவை வ்யவஹரிக்கப்படும். இந்த விஷயத்தை “ஶ்ருத்யர்த்தாந் ப்ரக்ருதிவசாந் ஸம்ஹிதாம் த்ரஷ்டவந்தம்” என்றும், “த்ராவிடீம் ப்ரஹ்மஸம்ஹிதாம்” என்றும், “வேதா நாமத்ய ஶாகாவ்யுதாஸே யுக்யதே” என்றும் “த்ராவிடோபநிஷந் நிவேஶஶூந்யதா” என்றும், “ஜ்ஞாநம் யஸ்ய ஸமஸ்த ஜந்து ஹிதமாதாய ஸஹஸ்ரஶாகம் வேத” என்றும் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தார். மற்ற ஆழ்வார்களும் மயர்வற மதிநல மருளப்பெற்றவர்களாகையால், அவர்களுடைய ப்ரபந்தங்களுக்கும் பௌருஷேயத்வ ப்ரயுக்தமான ப்ரம விப்ரலம்பாதி தோஷமேற்படாது. இந்த விஷயத்திற்கு ப்ரமாணங்கள் பலவுள. [illegible] யாலே நிரூபிக்கவில்லை.



இனி ப்ரபந்தங்களால் ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்தத்தினுடைய சீர்மையாவது: ஸம்ஸ்க்ருத வேதங்கள் “த்ரைகுண்யவிஷயா வேதா:” என்கிற ப்ரமாணத்தின்படி குணத்ரய வச்யர்களான சேதநர்களுடைய ருசியையநுஸரித்து, அவரவர்களுடைய அநிஷ்ட நிவ்ருத்தி இஷ்ட ப்ராப்தி இவைகளுக்கு ஸாதநங்களான, ச்யேந யாகம் முதலானவற்றை விதிப்பதுடன்கூட பூர்வ பாகத்தில் கர்ம பாகங்களை விஸ்தரித்து ப்ரதிபாதித்தும், ஸ்ருக்ஸ்ரவதம் முதலான அநுபயுக்தங்களான விஷயங்களைப் பரக்க உபபாதித்துமிருப்பதாலும், உத்தர பாகத்தில் ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை உபபாதித்திருந்தபோதிலும் அவைகளில் பரஸ்பர விருத்தங்கள்போல் தோன்றுகிற அர்த்த விசேஷங்களை ந்யாயஸஞ்சாரம் பண்ணி நிர்ணயிக்க வேண்டியிருப்பதாலும், இதிஹாஸங்களில் ஸ்ரீராமாயணம் ராம வ்ருத்தாந்தத்தைச் சொல்லப் புக்கு கங்கோத்பத்தி புஷ்பக வர்ணநம் முதலியவைகளை நிரூபிப்பதாலும், பாரதம் “நாராயணகதாமிமாம்” என்று உபக்ரமித்துப் பாண்டவர்கள் துர்யோதநாதிகள் இவர்களுடைய யுத்தம் முதலானவற்றை நிரூபித்துப் பூசல் பட்டோலையாக வ்யவஹரிக்கப்படுதலாலும், மற்றைப் புராணங்கள் “யஸ்மிந் கல்பே து யத் ப்ரோக்தம்” என்கிற ப்ரமாணத்தின்படி ப்ரஹ்மா தனக்கேற்படுகிற ஸத்வாதி குணத்ரயத்தினுடைய உந்மேஷத்தாலே அந்தந்த குண ப்ரசுரர்களான தேவர்களுடைய மாஹாத்ம்யங்களை ப்ரதிபாதிக்கைக்காக ப்ரவர்த்திப்பித்தபடியாலும், “ஸத்ய ப்ராய அதிஸத்யப்ராய” என்கிற ப்ரமாணத்தின்படி மோக்ஷாநுபயோகிகளான அர்த்த விசேஷங்களை ப்ரதிபாதிப்பதாலும் இவைகள் முமுக்ஷுக்களுக்கு உபஜீவ்யங்களாக மாட்டா. அப்படியன்றிக்கே ஆழ்வார்கள் அருளிச்செயல்களான திவ்ய ப்ரபந்தங்கள், ஆமூலசூடம் ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை ந்யாய ஸஞ்சாரத்தை அபேக்ஷியாமல் ஸம்சய விபர்யயமற உபபாதிப்பதாலும், இதர தேவதைகளுடைய ப்ரஸ்தாவ லேசமுமில்லாமல் பகவதநுபவத்தாலுண்டான ப்ரீதியாலே ஸர்வேச்வர விஷயத்தில் அவனுடைய முகோல்லாஸமே பரம ப்ரயோஜநமாகப் பண்ணப்படுகிற கைங்கர்யமே பரம புருஷார்த்தமென்றும், இதற்கு விரோதியான ஸம்ஸாரத்தில் வைராக்யத்தையும் இந்த்ரியங்களுடைய கொடுமையையும் பிறர்க்கு உபதேசித்தும், தங்களுக்கு இருப்பதையும் ஸ்பஷ்டமாகவும் உபபாதித்திருப்பதாலும், பரம ஸாத்விகர்களான முமுக்ஷுக்களுக்கு அத்யந்தோபஜீவ்யங்களான அர்த்த விசேஷங்களை ஸ்பஷ்டமாக நிரூபித்திருப்பதால் இவற்றில் ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்தங்கள் மிகவும் சீர்மையுடையவைகளாயிருக்கும்.

இனி வக்த்ரு வைலக்ஷண்யம் நிரூபிக்கப்படுகிறது. வேதங்கள் அபௌருஷேயமாகையாலே அவற்றின் வக்த்ரு வைலக்ஷண்யத்தை ப்ரஸ்

தாவிக்க இடமில்லை. இதிஹாஸ புராணங்களுக்கு வக்தாக்களான ருஷிகள், ஆழ்வார்களைப் போலே ஈச்வரனுடைய கடாக்ஷ விசேஷத்தாலே கிடைத்த ஜ்ஞாநமில்லாமல் ஸ்வயத்ந ஸித்தமான ஜ்ஞாநத்தையுடையவர்களாய், குணத்ரய வச்யர்களாய், ரஜோகுணம் தமோகுணம் மேலிட்ட காலங்களில் விஷயாந்தரங்களைக் கண்டு அவைகளில் ஆஸக்தர்களாய், காலம் போனது தெரியாமலிருப்பதாலும், ப்ராக்ருதமான காய்கிழங்குகளையே தாரக போஷகங்களாக அத்யவஸித்திருப்பதாலும், தங்களுக்கு அபிமதர்களான புத்ராதிகளுடைய வியோகத்தில் ப்ருகுபதநம் அக்நி ப்ரவேசம் முதலான கார்யங்களைச் செய்ய உத்யோகித்திருப்பதாலும், அவர்களால் ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்த விசேஷங்கள் முமுக்ஷுக்களுக்கு அத்யந்தோபஜீவ்யங்களாகமாட்டா. அப்படியன்றிக்கே ஆழ்வார்கள், "உண்ணுஞ் சோறு பருகுநீர்" என்கிற பாசுரத்தின்படி பகவத் குணங்களை தாரக போஷக போக்யங்களாகவும், பகவத் ஸம்ச்லேஷத்தால் "எனக்கினி யார் நிகர் நீணிலத்தே" இத்யாதிப்படி ஸந்தோஷ மதிசயித்தும், விச்லேஷ காலத்தில் "மாயும் வகை யறியேன்" என்று வருந்தி மடலூர்தல் முதலான அதிப்ரவ்ருத்திகளைச் செய்ய உத்யோகித்தும், விஷயாந்தரங்களுடைய தர்சநத்தால் "பல நீ காட்டிப் படுப்பாயோ" என்று வெருவியும், ஸம்ஸாரிகளுடைய துர்க்கதியைக் கண்டு ஸஹிக்கமாட்டாமல் அவர்களுக்குப் பலபடியாலும் வைராக்யத்தை உபதேசித்தும், பகவத் விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தை உபபாதித்தும், கைங்கர்யமே பரம புருஷார்த்தமென்று நினைத்தும், பகவத் விஷயத்தில் பக்தியைப் பண்ணுங்கோள் என்று உபதேசித்துப் போருகையாலும் இவர்களுடைய வைலக்ஷண்யம் ஸுஸ்பஷ்டம்.

இப்படி ப்ரபந்தங்கள் அவதரித்த க்ரமத்தாலும், அவை ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்தங்களுடைய கௌரவத்தாலும், வக்தாக்களுடைய வைலக்ஷண்யத்தாலும் பெருமையுடையன வாகையால் அவை மிகவும் ஆதரணீயங்கள். இனி ஆழ்வார்களருளிச் செயல்களான ப்ரபந்தங்களுக்கு ஸாதாரணார்த்தம் இன்னதென்றும் விசேஷார்த்தம் இன்னதென்றும் நிரூபிக்கப்படுகிறது. ஸாதாரணார்த்தமாவது அந்யாபதேசமாகச் சொல்லுகிற அர்த்தம். விசேஷார்த்தமாவது ஸ்வாபதேசமாகச் சொல்லுகிற அர்த்தம். அந்யாபதேசமாவது: ஒரு பாசுரத்திற்குப் பரம தாத்பர்ய விஷயமான அர்த்தத்தை மற்றொன்றாலே மறைத்துப் பேசுகை. அது எப்படிப்போலே என்னில்: "ஷுவாமதவதீ தைவாத்வனே ஸம் குடஜ ஸம்ப்ராப்தோ ப்ரமர: ஸகலந்தாப்ராப்தாஸ விதாநாஸ்யம் ஸாந்த்ய:॥" எங்கும் ஸம்மாநிக்கப்பட்ட ஒரு ப்ரௌட வித்வான் ஒரு ப்ரபுவினிடத்தில் போவதைப் பார்த்து, அவன் ப்ரபுவிற்கு எழுதியனுப்பின ச்லோகம். இதில் அந்யாபதேசமாவது: "குடஜ புஷ்பமே! உன்னிடத்தில் யாத்ருச்சிகமாக ப்ரமரம் வரும்படியாயிருக்கும்.



அப்பொழுது அந்த ப்ரமரத்தில் அநாதரத்தைப் பண்ணாதே; அந்த ப்ரமரம் மதுவினால் பூர்ணங்களான தாமரஸ புஷ்பங்களுக்கு மாந்யமாயிருக்கிறது" என்பது. இதற்கு ஸ்வாபதேசமாவது: "குடஜ புஷ்பம் எப்படி ச்லாக்யமான பரிமளத்தோடு கூடிக்கொண்டிருக்கிறதோ, அப்படி ச்லாக்யமான குணத்தோடு கூடிக்கொண்டிருக்கிற ப்ரபுவே! தேனையே புஜித்துத் தேன் போல இனியவாக்கையுடைய வண்டுபோன்ற அநேக காவ்ய ரஸங்களை அவகாஹித்து அத்தாலே மதுர வாக்காயிருக்கிற வித்வானானவன் உன்னிடத்தில் வருகிறபடியால் அவனை அநாதரம் பண்ணாதே; தாமரஸ புஷ்பங்கள் எப்படி மதுவாலே பூர்ணங்களாயிருக்குமோ, அப்படிப்போல் போக்யங்களான குணங்களோடும் ஸம்பத்துக்களோடும்கூடின மஹா ரஸிகர்களுக்கு அவன் பூஜ்யன்" என்பது. இதுபோல் ப்ரபந்தங்களில் ஈச்வரனை நாயகனாகவும் தங்களை நாயகிகளாகவும் நினைத்து, அந்த நாயகனுடைய விச்லேஷ காலத்தில் தூதப்ரேஷணம் மடலெடுக்கை முதலான வ்யாபாரங்களைச் செய்தும், ப்ரணயாதிக்யத்தால் வந்த ரோஷத்தாலே அவன் வரக்கொள்ள அவனை அநாதரித்தும், ஸம்ச்லேஷம் நேர்ந்தால் அந்த ரஸத்தை யநுபவித்துத் தாங்கள் இனியராகப் பேசுகையும் அந்யாபதேசமாகும். ஸ்வாபதேசமாவது: புருஷோத்தமனான ஸர்வேச்வரனுடைய புருஷோத்தமத்வத்தை அநுஸந்தித்து, அதற்கு எதிர்த்தட்டான "ஸ்த்ரீப்ராயமிதரம் ஜகத்" என்கிற ப்ரமாணத்தின்படி தங்களுக்கு உண்டான அநந்யார்ஹ சேஷத்வம் அநந்ய போகத்வம் முதலான ஸ்த்ரீ ஸ்வபாவங்களை அநுஸந்தித்து, அந்த அநுஸந்தாந ப்ரகர்ஷத்தாலே, புருஷோத்தமனிடத்தில் ப்ராவண்யமுடைய நாயகிகளாகப் பேசுகையும், அந்தப் புருஷோத்தம விஷயத்தில் உண்டான ப்ரீதி ரூபாபந்ந ஜ்ஞாநமான பக்தியைக் காமமாகப் பேசுகையும், போகத்திற்கு உபகரணமான பக்தியை ஸ்தநங்களாகவும், இடையை வைராக்யமாகவும், கண்ணை ஜ்ஞாநமாகவும், அளக பாரத்தை ஜ்ஞாந விகாஸமாகவும் வ்யவஹரிக்கையும், மகளென்றும் தோழியென்றும் தாயாரென்றும் ஏற்படுகிற அவஸ்தைகளில் மகள் ப்ராப்ய த்வரையாகவும் தோழி ஸம்பந்த ஜ்ஞாநமாகவும் தாயார் உபாயாத்யவஸாயமாகவும் வ்யவஹரிக்கையும், தூத ப்ரேஷணத்தில் தூதர்கள் கடகர்களாகையாலே அவர்களைச் சேதநனுக்கும் ஸர்வேச்வரனுக்கும் கடகர்களான ஆசார்யர்களாக வ்யவஹரிப்பதும், இந்த ரீதியை யுடையது ஸ்வாபதேசம். மடலூர்கை முதலான அதிப்ரவர்த்தியாவது: நாயகிகள் நாயகர்களுக்குப் பாரதந்த்ரைகளாகையாலே அந்தப் பாரதந்த்ர்யத்திற்கு விருத்தமான அதிப்ரவர்த்தி போல, பகவத் விஷயத்தினுடைய லோக விஜாதீயமான ஸௌந்தர்யாதிகளை அநுஸந்தித்து, அதனுடைய அநுபவம் பெறாமையால் வந்த ஆர்த்தியாகிற பக்தியினுடைய பாரவச்யத்தால் கலங்கி, தாங்கள் பரிக்ரஹித்த அநந்யாபேக்ஷ ஸித்தோபாயத்திற்கு விருத்தமான உபாயாந்தர ப்ரவர்த்தி

விசேஷங்களாக ஏற்படும். அந்த அதிப்ரஸக்தி ஸித்தோபாய நிஷ்டைக்கு விருத்தையாயிருந்தபோதிலும், அது அந்த ஸித்தோபாய வைலக்ஷண்ய ஜ்ஞாநத்தாலேயுண்டான ப்ராவண்யத்தாலே வருமதாகையாலே நிஷ்டாஹாநி ஏற்படாது. இப்படி ஸ்வாபதேசத்தில் பரம தாத்பர்யம் விசேஷார்த்தம்; அதை அந்யாபதேசமாகப் பேசுகை ஸாதாரணார்த்தம். இப்படியே இந்த ப்ரபந்தங்களில் பல படிகளான அந்யாபதேசங்களுக்கு ஸ்வாபதேசங்கள் ஏற்பட்டிருக்கும். அவற்றை விஸ்தர பயத்தாலே நிரூபிக்கவில்லை. ப்ரபந்தங்கள் வ்யங்க்ய ப்ரதாநங்களாயிருக்கையே உத்கர்ஷாவஹம். அப்படிப்பட்ட வ்யங்க்யார்த்தமே திவ்ய ப்ரபந்தங்களில் முமுக்ஷுக்களுக்கு அத்யந்தோபயுக்தமாக இருப்பதால், இந்தத் திவ்ய ப்ரபந்தங்கள் பரமஸாத்விகர்களுக்கு அத்யந்தோபஜீவ்யங்கள்.

இனி பக்திரஸமாவது: பகவத் விஷயத்தில் ஆழ்வார்களுக்கேற்பட்ட நிரதிசய ப்ரீதி ரூபாபந்ந ஜ்ஞாந விசேஷம், பகவததிசயாதாயகமான ஸ்வரூபத்திற்கு உசிதமாயும் அந்த ஜ்ஞாநத்திற்கு ஆலம்பமான பகவத்விஷயம் லோக விஜாதீயமான வைலக்ஷண்யத்தை உடையதாயிருக்கையாலே அந்த வைலக்ஷண்யாநுஸந்தாநத்தாலே வந்ததாகையால் குணாந்ருதமாயுமிருக்கும். இப்படியிருந்துள்ள ஜ்ஞாநமானது விஷயாநுகூல்யத்தாலே தானும் அநுகூலமாய் இதுவே புருஷார்த்தமாக ஏற்படும். இந்த விஷயம், “யா ப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ। த்வாமநுஸ்மரத ஸா மே ஹ்ருதயாந்மாபஸர்ப்பது” என்று ப்ரஹ்லாதன் ப்ரார்த்திப்பதாலே வ்யக்தம். இது “ஸ்வஸ்த்யஸ்து விஸ்வஸ்ய கலஸ்ஸ ப்ரஸீததாம் த்யாயந்து பூதாநி ஸிவம் மிதோ தியா। மநஸ்ச பத்ரம் பஜதாததோக்ஷஜே ஆவேஸ்யதாம் நோ மதிரப்யஹைதுகீ॥” என்று ‘ஜிதந்தே’ ஸ்தோத்ரத்திலும் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ளது. இதையே நம்மாழ்வார் “உலகு படைத்துண்ட வெந்தை”, “ஒன்றுண்டு செங்கண் மால்” என்கிற பாட்டுக்களிலும், திருமழிசையாழ்வார் “நேடிநின்ற சீர்வாத்தனைப்” என்கிற பாட்டிலும் அருளிச் செய்தார்கள். ஸ்ரீபாஷ்யத்திலும் இவ்விஷயம் “ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே” என்று நிரூபிக்கப்பட்டது. இப்படியிருந்துள்ள பக்தி கார்யங்களாவன: கலக்கமும், அத்தாலுண்டான அஸ்தாந பய சங்கையும், அந்த பய சங்கையாலே ஸர்வோத்க்ருஷ்டமான பகவத் விஷயத்திற்கு மங்களாசாஸநம் பண்ணுகையும், தனக்கு ஸ்வரூபஹாநி ஏற்பட்ட போதிலும் பகவத் விஷயத்திற்கு ஒரு குறைவு வாராமலிருக்க வேணுமென்று ப்ரார்த்திக்கையும். இந்த விஷயங்கள் நித்ய விபூதியில் “ஆங்கார வாரமது கேட்டு” என்கிற பாட்டில், திருவநந்தாழ்வான் அவ்விடத்தில் ஏற்படுகிற ஸாமகாநத்தைக் கேட்டு விரோதிகளுடைய ஆரவாரமாக நினைத்து அவர்களை நிரஸிக்கைக்காக விஷாக்நியை



உமிழும் என்று சொல்லியிருப்பதாலும், ஸ்ரீராமாயணத்தில் விச்வாமித்ரர் பிராட்டி இவர்கள் அஸ்தாந பய சங்கையாலே மங்களாசாஸநம் பண்ணுகையாலும், “ந ச ஸீதா த்வயா ஹீநா” என்கிற ச்லோகத்தின்படி க்ஷண கால விச்லேஷம் நேர்ந்தால் முடியும் ஸ்வபாவரான இளைய பெருமாள் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளும் காலத்தில் “காலஸ்ய வசமாபந்ந” என்று கால புருஷனுக்கும் தமக்குமுண்டான ஸம்வாத காலத்தில் ஒருவரும் வரக்கூடாதென்று இளைய பெருமாளைக் காவலாக நியமித்து, யாரையாவது வரவிட்டால் அவருக்கு வத பர்யந்தமான சிக்ஷை பண்ணுவதாக ப்ரதிஜ்ஞை பண்ணியிருக்கும் காலத்தில், துர்வாஸஸ் வர, அவரை வரவிடாமலிருந்தால் அவருக்குக் கோபமுண்டாகி அவர் சபித்தால் பெருமாளுக்குக் குறைவு உண்டாகும் என்று நினைத்து துர்வாஸஸ்ஸை வரவிட்டுப் பிறகு பெருமாளிடத்தில், ‘தேவரீர் பண்ணின ப்ரதிஜ்ஞைக்கு ஹாநி வராமல் வத பர்யாயமாகத் தன்னை விட்டுவிட வேணும்’ என்று ப்ரார்த்தித்தபடியாலும் வ்யக்தங்கள். ஆழ்வார்களிலும், பெரியாழ்வார் பக்தி பாரவச்யத்தாலே கலங்கி அவனுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வ சக்தத்வாதிகளில் அறிவில்லாமல், முகப்பில் ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதிகளை அநுஸந்தித்து மங்களாசாஸநம் பண்ணினார். நம்மாழ்வாரும், “அங்குமிங்கும்” என்கிற திருவாய்மொழியில், “ஆளுமாளார்........வாளும் வில்லுங் கொண்டு பின் செல்வார் மற்றில்லை” என்று வருந்தினார். “வளவேழுலகில்”, ‘ஸ்ரிய:பதியான ஈச்வரனை அதிக்ஷுத்ரனான நான் கிட்டி அவத்யத்தை விளைவிப்பதைக் காட்டில் அகன்று முடிவதே ஸ்வரூப’மென்று நினைத்து அகல, பின்பு ஈச்வரன் ‘உம்முடைய ஸம்பந்தம் நமக்கு அவத்யாவஹமன்று; லக்ஷ்மீ கௌஸ்துபாதிகள் போலே அத்யந்தம் அபிமத விஷயம்’ என்று ஸமாதாநம் பண்ண ஸமாஹிதரானார். இப்படியே குலசேகராழ்வாரும் சக்ரவர்த்தித் திருமகன் விஷயத்தில் அஸ்தாந பய சங்கை பண்ணினதும் ப்ரஸித்தம். திருமழிசையாழ்வார், “நடந்த கால்கள் நொந்தவோ” என்று ஈடுபட்டார். இப்படியே ஆழ்வார்கள் எல்லார் படியும். இப்படி பக்தி ரஸத்தினுடைய ப்ரகாரம் ஆழ்வார்களிடத்தில் வ்யக்தமாகக் காணலாம்.

இனி ப்ரபத்தி முக்யோபாயமென்பது நிரூபிக்கப்படுகிறது. ப்ரபத்தியாவது: அகிஞ்சநனுப் பக்த்யாநுஷ்டாநத்தில் அஜ்ஞாநாசக்தி முதலியவை ஏற்பட்டு, ஈச்வரனையே உபாயமாக வரித்து, அவனிடத்தில் ரக்ஷாபரத்தை ஸமர்ப்பிக்கை. இந்த ப்ரபத்திக்கு ப்ராரப்த சரீராவஸாநத்தில் முக்தி ஏற்பட்டிருக்கிறபடியால் விளம்பாக்ஷமர்களுக்கும் இது அநுஷ்டேயம். இப்படி இருந்துள்ள ப்ரபத்தி பக்தியைக் காட்டிலும் மேலானது. அதற்கு ப்ரமாணங்கள்: “தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததாऽஸுகம்” என்றும், “வாஞ்சா

த்ய உபாயாந்தர ஸ்தாநே ப்ரஹேயோஹமா:'' என்றும், ''ஸாத்யஸாதநம் அபோ பாயா: ஸாத்யஸாதநம் ப்ரியா ஜநா:'', ''ஸ ஏகதாயிகாரீ ஸ்ம்ருத:'' என்றும் பல வுள. தேசிகனும் ''ப்ரபந்நாநாம் தேஷாம் ந ஹி பதிரபேக்ஷாதோ நிஜ வசம்'' என்றும், ''ப்ரபத்திக்கல்லது ஈச்வரன் இரங்கான்' என்றும் ப்ர பத்தியினுடைய சீக்ர ப்ரஸாத ஹேதுத்வத்தை யருளிச்செய்தார். ஜ்ஞாந வான்களாயும் சக்தர்களாயு மிருப்பவர்கள், ப்ரபத்தியே முக்யோபாய மென்று அத்யவஸித்து அத்தையே அநுஷ்டித்துப் போந்தார்கள். சரணாகதி அமோ கை என்றும், அதனுடைய ஸ்வரூப மின்னதென்றும் அறியாத திர்யக்கும், தன்னுடைய பார்யையை அபஹரித்த வேடன் தன்னுடைய இருப்பிடத்திற்கு வர, ''ஸ்வேந ஸ்வமாம்ஸேந நிமந்த்ரித:'' என்று தன்னுடைய மாம்ஸத்தைக் கொண்டு வேடனுடைய ச்ரமத்தைப் பரிஹரித்தது. அங்ஙன மன்றிக்கே பட்டர் திருக்கோஷ்டியூருக்கு எழுந்தருளுகிற காலத்தில் மார்க்க மத்யத்தில் ஒரு வேடன் குடிசையில் ராத்திரி தங்க, ராத்ரி வேடன் காட்டிற்குப் போய் வந்தவுடன் 'இன்றையதினம் காட்டில் நடந்த விசேஷமென்ன?' என்று கேட்க, அவன், ஒரு ஆண் முயலை அடிக்கத் தான் யத்தனித்ததாகவும், அப் பொழுது கர்ப்பிணியாயிருக்கிற பெண் முயல் தன்னைச் சரணாகதி பண்ணின தாகவும், அதனால் இரங்கி அந்த முயலை யடிக்காமல் விட்டுவிட்டதாகவும் சொல்லிய வார்த்தையைக் கேட்டுப் பட்டர் 'இந்த வேடன் ஹிம்ஸையைத் தொழிலாகக்கொண்டு சரணாகதியினுடைய ப்ரபாவம் அறியாமலிருக்க, பெண் முயலும் சரணாகதியினுடைய ப்ரபாவ மறியாமலிருக்க, சரணாகதியானது அமோகையாய் விட்டபடியால் ஸர்வஜ்ஞனும் ஸர்வ சக்தனும் பரம க்ருபா வானுமுள்ள ஸர்வேச்வரன் விஷயத்தில் பண்ணின ப்ரபத்திக்குப் பலம் நியதமாகையால் நமக்கொரு குறைவுமில்லை' என்று அருளிச்செய்தார் என் கிற வ்ருத்தாந்தத்தாலேயும் ப்ரபத்தி முக்யோபாய மென்பது வ்யக்தம். இப் பொழுதும் யாராவதொருவனை ஒருவன் தன்னுடைய ஆடங்கிவ்ருத்யர்த்த மாகச் சரணாகதியைப் பண்ணினால் அதற்குப் பலம் நியதமாயே யிருக்கிறது. இப்படி ப்ரபத்தியினுடைய முக்யத்வம் நிரூபிக்கப்பட்டது.

இனி ஆழ்வார்களில் நம்மாழ்வாருடைய ப்ராதாந்யம் நிரூபிக்கப்படு கிறது. ஆழ்வார்களெல்லாரும் மயர்வற மதிநல மருளப்பெற்றவர்களா யிருந்த போதிலும், நம்மாழ்வார் அவதரித்த காலம் முதல் ''ஸ்ரீஜாநு: ஷோடசமா ஸாந் ஸ்தநந்த்யநபிலாஷிணே'' என்றும், ''உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்'' என்றும் சொல்லு கிறபடியே பகவத்குணங்களே தாரக போஷக போக்யங்களாக இருந்தரா லும், அடிக்கடி நாயிகாவஸ்தையை யடைந்தும், தோழி தாயார் இவர்க ளுடைய அவஸ்தையைப் பஜித்தும், தாமான தன்மையிலும் பகவதநுபவா



லாபத்தாலே கேட்டார் இரங்கும்படி கூப்பிட்டும், ''உண்ணிலாவிய ஐவரால்'' என்கிற திருவாய்மொழியில் இந்த்ரியங்களுடைய கொடுமைக் கஞ்சி அழைத் தும், பகவத் விஷயத்தில் அத்யந்த விமுகர்களான ஸம்ஸாரிகளுடைய துர்க்கதியைக் கண்டு ஸஹிக்க மாட்டாமல் ''வீடுமின் முற்றவும்'', ''ஏபாவம் பரமே'' இத்யாதிகளால் பலபடியாக உபதேசித்தும், ''பல நீ காட்டிப் படுப்பாயோ'' வென்று ஸம்ஸார தர்சநத்தில் முடியும்படியாக இருப்ப தாலும், மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் இவர் ப்ரதாநர். அங்ஙன மன்றிக்கே ப்ரபந்தங்கள் லுப்தங்களாய்ப் போன காலத்தில் அவற்றை அர்ச்சா ரூபியா யிருக்கிற ஆழ்வார் பௌர்வாபர்ய விசிஷ்டமாக நாதமுநிகளுக்கு உபதே சித்து இந்த விசிஷ்டாத்வைதத்தைத் தழைக்கும்படி செய்கையாலும் ப்ரா தாந்யம் தோற்றும். ஆதலால் மற்ற ஆழ்வார்கள் இவருக்கு அவயவ பூதர் களாக வ்யவஹரிக்கப்படுவார்கள். நம்மாழ்வார் ஆழ்வார்களில் தலைமையாக இருப்பதுமன்றி, குருபரம்பரையிலும் ப்ரதாநாசார்யனாகவும் இருப்பார். இத்தை யநுஸந்தித்தே ஸ்ரீ ஆளவந்தார் ''ஆத்யஸ்ய ந: குலபதே:'' என்று அருளிச்செய்தார். இப்படி ப்ரபந்தங்களுடைய உத்கர்ஷமும், ஸாதாரணார்த்த விசேஷார்த்தங்களும், பக்தி ரஸத்தினுடைய படியும், ப்ர பத்தியினுடைய முக்யத்வமும், மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் நம்மாழ்வ ருடைய ப்ராதாந்யமும் யதாமதி நிரூபிக்கப்பட்டன.

''ஸத்ர ஸம்ஸ்ருதி மரணஸத்ராந்த ஸ வகுளாபரணோத்யதவ்யோதித: ।
தோஷமேவ ஜநயந்நயம் க்ஷேத்ரதாம் ஹ்ருதயாம்புஜே ந ஸதி: ॥''

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பசுபத்யதிகரணம்.

(ஸ்ரீ. உ.வே. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.)

'ஜிஜ்ஞாஸா' என்னும் பத்ரிகையில் அதன் ஸம்பாதகர்களுள் ஒரு வரான ப்ரஹ்ம ஸ்ரீ. வைத்ய விசாரத நடேச சாஸ்த்ரிகள் என்பவர், 'பத்யு ரஸாமஞ்ஜஸ்யாத்' என்று ஆரம்பிக்கும் அதிகரணத்தின் தாத்பர்யத்தைப் பற்றி ஸ்ரீ சங்கராசார்யர் என்ன அபிப்ராயப்பட்டிருக்கிறார் என்பதை விசா ரிக்கப் புகுந்து, அதன் நிர்ணயத்தை ஒருவாறு சொல்லிவிட்டு, ஸ்ரீ ராமாநுஜ பாஷ்யத்தின் வ்யாக்யாதாவாகிற ஸ்ரீ ச்ருத ப்ரகாசிகாசார்யரால் அந்த அதி

சரண ஸம்பந்தமாகச் சொல்லப்பட்டுள்ள சில உக்திகளை உதாஹரித்து, அவைகளுக்கு அத்வைதிகள் என்ன ப்ரதிவசநம் சொல்லுகிறார்கள் என்பதை விவரித்திருக்கிறார். இந்த ஸ்ரீ சங்கராசார்யருடைய அபிப்ராய நிர்ணயத்திலும், மேல்கொண்டு செய்யப்பட்டுள்ள மற்றொரு விசாரத்திலும் ஸ்ரீ சாஸ்த்ரிகள் சொல்லியிருக்கும் விஷயங்களைப்பற்றி நமக்குச் சில ஸம்சயங்கள் ஜநிக்கின்றன. அவைகளை நாம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கின்றோம்.

முதலில் ஸூத்ராபிப்ராயத்தின் நிர்ணயத்தைப் பற்றிய ஸம்சயம். ஸூத்ரகாரர், வைதிக மதத்தை ஸ்தாபநம் செய்ய வேண்டுமென்று ப்ரவ்ருத்தித்து, அதன் ஸ்தாபநத்திற்காக வேதாந்த வாக்யங்களுடைய தாத்பர்யத்தை நிர்த்தோஷமாக நிச்சயித்த பிறகு, பரபக்ஷ நிராகரணம் செய்யாமல் இருந்தால் ஸ்வ பக்ஷத்துக்கு ஸ்தைர்யம் கிடைக்க மாட்டாது என்று எண்ணி, இந்த ‘பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்’ என்னும் ஸூத்ரம் காணப்படும் இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாதத்தில் பரபக்ஷங்களுடைய ப்ரத்யாக்யாநத்தைச் செய்வதற்கு ஆரம்பிக்கிறார். முதலில் ஸாங்க்ய மதத்தையும் பிறகு வைசேஷிகர்களுடைய மதத்தையும் பிறகு பௌத்தர்களுடைய மதத்தையும் அதற்குப் பிறகு இன்னும் இம்மாதிரியான பல மதங்களையும் நிரஸநம் செய்து விட்டு, பிறகு ‘பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்’ என்னும் ஸூத்ரத்தைக் கொண்டு இந்த அதிகரணத்தை உபக்ரமிக்கிறார். இந்த அதிகரணத்தில் எந்த மதம் நிரஸிக்கப்படுகின்றது என்பது தான் ப்ரக்ருத விசாரம். ஸ்ரீ ராமாநுஜாசார்யர், ‘பத்யு:—பசுபதியினுடைய (மதம் அநாதரணீயம்), அஸாமஞ்ஜஸ்யாத்—(அது) அஸமஞ்ஜஸமாக இருக்கிறபடியால்’ என்று ஸூத்ரத்திற்கு அர்த்தம் செய்து, இந்த அதிகரணத்தால் ஸூத்ரகாரர் சைவ ஆகமங்களை நிராகரிக்கின்றார் என்று பாஷ்யம் செய்திருக்கிறார். ஸ்ரீ சங்கராசார்யர், ‘பத்யு:—ஈச்வரனுடைய (கேவல ஜகத்திற்கு அதிஷ்டாதாவாக இருக்கும் தன்மை அவனுக்கு உபபந்நமாக மாட்டாது), அஸாமஞ்ஜஸ்யாத்—(அது) அஸமஞ்ஜஸமாக இருக்கிறபடியால்’ என்று பாஷ்யம் செய்திருக்கிறார். இதைப் பார்க்கும்பொழுது, ஸ்ரீ சங்கராசார்யருக்கு ‘இந்த அதிகரணம் சைவாகம நிராஸ பரம்’ என்று சொல்வதில் அபிப்ராயம் இல்லைபோலத் தோன்றும். ஸ்ரீ சங்கராசார்யருடைய உண்மையான அபிப்ராயம் என்ன என்பதை விசாரிக்கப் புகுந்தால், அதில் விவாதம் ஸம்பவிக்கின்றது. ஸ்ரீ சாஸ்த்ரிகள் அநேக காரணங்களை ஆதாரமாகக் கொண்டு, ஸ்ரீ சங்கராசார்யருடைய அபிப்ராயத்தைப் பின்வருமாறு நிர்ணயித்திருப்பதை நாம் பார்க்கிறோம். ‘ஜகத்திற்கு ஈச்வரன் கேவலம் நிமித்த காரணமாக இருக்கின்றான்’ என்று எவரெவர் வாதிக்கிறார்களோ அவரவர்களுடைய மதங்களையே ஸூத்ரகாரர் இந்த அதிகரணத்தில் நிராகரிக்கிறார் என்பதே ஸ்ரீ சங்கராசார்யருடைய அபிப்ராயமென்றும், ஸாங்க்யர்களுள்



சிலர் வைசேஷிகர்களுள் சிலர் மாஹேச்வரர்கள் இவர்களெல்லாரும் ஈச்வரனுக்குக் கேவல நிமித்த காரணத்வத்தைச் சொல்லுகிறபடியால் அவர்களெல்லாரையுமே இவ்விடத்தில் நிரஸிக்கப்படுகிறவர்களாக ஸ்ரீசங்கராசார்யர் எண்ணுகிறாரென்றும், மாஹேச்வரர்களைப் பற்றி ஸ்ரீசங்கராசார்யர் இவ்விடத்தில் பொதுவாக ப்ரஸ்தாவித்திருந்தபோதிலும், அவர் அந்த மாஹேச்வர சப்தத்தால் நாலுவித மாஹேச்வரர்களுள் ஒரு வகுப்பினரான பாசுபதர்களை மாத்ரம் க்ரஹிக்கிறாரே தவிர மற்றை மாஹேச்வரர்களை க்ரஹிக்கவில்லை என்றும், ஸ்ரீசங்கராசார்யரை அநுஸரித்தே ஸூத்ர வ்யாக்யாநத்தைச் செய்திருப்பதாக ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரால் கொண்டாடப்படும் ஸ்ரீ கண்டரும் அந்த மாதிரியே விவரித்திருக்கிறாராகையால் ஸ்ரீ சங்கராசார்யருடைய மதம் இதுதான் என்றும் ஸ்ரீ சாஸ்த்ரிகள் சொல்லுகிறார். இதைச் சற்று பராமர்சிப்போம்.

“பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்”—என்னும் அதிகரணத்தை, ஸ்ரீ சங்கராசார்யர், “இதாநீம் கேவலாதிஷ்டாத்ரீச்வர காரணவாத: ப்ரதிஷித்யதே” (இப்பொழுது ஈச்வரனைக் கேவல நிமித்த காரணமாக மாத்ரம் கல்பிக்கும் ஸித்தாந்திகளுடைய மதம் நிராகரிக்கப்படுகின்றது) என்று உபக்ரமிக்கிறார் என்பது உண்மையே; சைவாகமங்கள் இவ்விடத்தில் நிராகரிக்கப்படுகின்றன வென்று விசேஷித்துச் சொல்லப்படவில்லை. உபபாதநத்திலும் “கேசித் ஸாங்க்யயோகவ்யபாச்ரயா: கல்பயந்தி” என்றும், “மாஹேச்வராஸ்து மந்யந்தே” என்றும், “ததா வைசேஷிகாதயோऽபி கேசித்” என்றும் மூன்று பெயர்களையும் ப்ரஸ்தாவித்து, “அத உத்தரம் உச்யதே” என்று இவர்கள் மூன்று பெயர்களுக்கு இந்த அதிகரணம் ஸமாதாநம் சொல்லுகிறது என்று பொதுவாகவே சொல்லியிருக்கிறார். ஆகையால், மாஹேச்வரர்களை மாத்ரமின்றிக்கே, கேவல நிமித்தகாரண ஈச்வர வாதிகளான மற்றவர்களையும் இந்த அதிகரணத்தின் நிராஸத்திற்கு விஷயமாக ஸ்ரீ சங்கராசார்யர் க்ரஹித்திருக்கிறார் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால், ‘மாஹேச்வர சப்தத்தால், ஸ்ரீ சங்கராசார்யர், மாஹேச்வரர்களுள் ஒரு வகுப்பினரான பாசுபதர்களை மாத்ரம் க்ரஹிக்கிறாரே தவிர, மற்றை மூன்று வகுப்பினர்களை அவர் இவ்விடத்தில் க்ரஹிக்கவில்லை’ என்று ஸ்ரீ சாஸ்த்ரிகள் சொல்வது ஆக்ஷேபார்ஹமாகவே நமக்குத் தோன்றுகிறது. அப்படி மாஹேச்வரர்களுள் ஒரு வகுப்பினரை மாத்ரம் ஸ்ரீ சங்கராசார்யர் ப்ரஸ்தாவிக்க இஷ்டப்பட்டிருந்தால், ஸாங்க்யர்களுள்ளும் வைசேஷிகர்களுள்ளும் இவ்விடத்தில் ஒவ்வொரு வகுப்பினரை மாத்ரம் குறிப்பதற்காக “கேசித் ஸாங்க்யயோகவ்யபாச்ரயா:” என்றும், “வைசேஷிகாதயோऽபி கேசித்” என்றும், “கேசித்”

சப்தத்தை ப்ரயோகித்திருப்பது போல "கெஷிஜாஹெமஸ்ராஃ" என்று மாஹேச்வரர்கள் விஷயத்திலும் "கெஷிக" சப்தத்தை ப்ரயோகஞ் செய்திருப்பார். அப்படி "கெஷிக" என்னும் சப்தம் இன்றிக்கே "ஊஹெமஸ்ரா உக்ஷெ" என்று பொதுவாகச் சொல்லியிருப்பதைப் பார்த்தால், ஸகல மாஹேச்வரர்களையும் அவர் விவக்ஷிக்கிறார் என்று சொல்லவேண்டுமென்றே தோன்றுகின்றது. தவிரவும், "காய-காரண யொ,ம வியிஷ:வாஹா: வஂஅ வஷாய-ஊ:" என்னும் வாக்யம் உபபாதநத்தில் காணப்படுகின்றது என்னும் காரணத்தைக்கொண்டு, அந்த ஐந்து பதார்த்தங்களை ஒத்துக்கொள்ளும் பாசுபதர்கள் மாத்ரம் இவ்விடத்தில் விவக்ஷிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் அங்கீகரித்தபோதிலும், நிகமநத்தில் காணப்படும் "ஸவஊக்ஷாவி வெஷ பாஹூாவீஸ்ரகஷுதாவ யயாவஂஹவஊவாஊஂஜவொஂ யொஜயிதவஂஃ" (இம்மாதிரியே வேத பாஹ்யங்களான மற்றை ஈச்வர கல்பனைகளிலும் அஸாமஞ்ஜஸ்யத்தை யோஜித்துக்கொள்ள வேண்டும்) என்னும் வாக்ய பலத்தால் மற்றை மூன்றுவித மாஹேச்வரர்களும் இவ்விடத்தில் க்ரஹிக்கப்பட்டு நிராகரணம் செய்யப்படுகின்றார்கள் என்று நாம் அறிந்துகொள்ள வேண்டியதில்லையா? மற்றை மாஹேச்வரர்கள் வேத பாஹ்யர்களாயிருந்தாலன்றோ அப்படி நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்னில், மாஹேச்வரர்களெல்லாரும் வேத பாஹ்யரென்பது ஸ்ரீ சங்கராசார்யருடைய அபிப்ராயமன்றோ? கேவல நிமித்தகாரண ஈச்வரவாதம் செய்வதுடன் ச்ருதி பலத்தை த்யஜித்து ஆகம பலத்தை அவலம்பித்தே அவர்களெல்லாரும் ஈச்வரனை ஸாதிக்கவில்லையா? அதனால் என்ன தோஷமென்னில், ஸ்ரீ சங்கராசார்யருக்கு ஆகமங்களின் ப்ராமாண்யம் அபிமதமென்பது, "வாஜஹாவி ஸவஜ்ஞ ப்ரணீதாமூ ஸஹூாவாக ஸாதஊாமஊபவழுஊதீ தெஹ; உதஹெதஸாஹ்ய ப்ரஸஂமாக; கூமஊப்ர தஹயாக ஸவஜ்ஞஸ ஸிஜூ:, ஸவஜ்ஞ ப்ரதஹயாஹுமஊவிஜிஸிதி" என்னும் ஸ்ரீ ஆசார்யருடைய வாக்யத்தால் வெளிப்படுகின்றது. ச்ருதி வாக்யங்களைக்கொண்டு அவர்கள் ஈச்வரனை ஸாதிக்கவில்லை என்பதும் ஸ்பஷ்டம். ஏனென்றால், ச்ருதி பலத்தைக்கொண்டு ஈச்வரனை ஸாதிக்கும் பக்ஷத்தில், அந்த ச்ருதி வாக்யங்கள், புருஷோத்தமனுக்கு அஸாதாரணமான நாராயணன் என்னும் பெயராலேயே காரண வஸ்துவை ப்ராயேண நிர்த்தேசிக்கிறபடியால், அந்த நாராயணனே ஜகத்காரணமான ப்ரஹ்மம் என்று ஒத்துக்கொள்ளும்படி ஸம்பவிக்கும்; அது அவர்களுக்கு அநிஷ்டமன்றோ? மாஹேச்வரர்களெல்லாரும் வேத பாஹ்யர்கள் என்பதற்கு வேறு அநேக ஹேதுக்களுமுண்டு.

"தீக்ஷாப்ரவெஶ ஊாதெ்ரண ப்ராஹ்மணொ ஹவதி க்ஷணாக ।
காவாஞூஂ ப்ரதஊாஷ்டாய யதி ஹவதி ஊாதவஃ ॥"



(ஒரு க்ரியாவிசேஷத்தால் விஜாதீயர்களுக்கும் ப்ராஹ்மண்ய ப்ராப்தியும் உத்தம ஆச்ரம ப்ராப்தியும் ஒரே ஜந்மத்திலே ஸம்பவிக்கின்றன) என்று அவர்களுடைய ஆகமம் சொல்வதை வேதத்திற்கு ஒத்ததென்று ஸ்ரீ சங்கராசார்யர் அப்யுபகமம் செய்வரோ? இன்னும் அவர்களுடைய தர்மங்களில் அநேகம் வேத விருத்தமாக இருக்கிறபடியால் அவர்களை அவைதிகர்களென்றே ஸ்ரீ சங்கராசார்யர் க்ரஹித்திருக்க வேண்டுமாகையால், கீழ் உதாஹரிக்கப்பட்டுள்ள "ஸவஊக்ஷாவி வெஷபாஹ்யாவீஸ்ர கஷுதாவ" இத்யாதியான நிகமந வாக்யத்திற்கு எல்லா மாஹேச்வரர்களும் விஷயமாகிறார்களென்றே நமக்குத் தோன்றுகிறது.

ஒருகால், 'இந்தப் பாதத்தில் யுக்தி காடத்வத்துடன் கூடிய அவைதிக தர்சநங்கள் மாத்ரம் நிரஸிக்கப்படுகின்றனவாகையால் அப்படிப்பட்ட யுக்தி காடத்வம் பெறாத சைவாகமங்களுக்கு இவ்விடத்தில் ப்ராப்தி இல்லை' என்று ஸ்ரீ சங்கராசார்யர் அபிப்ராயப்பட்டிருப்பரோ வென்னில், அப்படி அவர் அபிப்ராயப்பட்டிருக்க மாட்டார் என்றே சொல்லவேண்டும். ஏனென்றால், இதே பாதத்தில், ஆகமத்வேந சைவாகமங்களுக்குத் துல்யமாகவிருக்கும் பாஞ்சராத்ராகமத்தைக் கேவலம் 'வேதவிருத்தம் விப்ரதிஷித்தம்' என்னும் காரணங்களை ஆதாரமாகக்கொண்டு, அடுத்துவரும் 'உத்பத்த்யஸஂஹவாக' என்னும் அதிகரணத்தில் ஸ்ரீ ஸூத்ரகாரர் நிராகரணம் செய்வதாக ஸ்ரீ சங்கராசார்யர் வ்யாக்யாநம் செய்யவில்லையா? அந்த நிராகரணம் ப்ராப்தமாகும்பொழுது ஏன் சைவ ஆகம நிராகரணம் அப்ராப்தமாக வேண்டும்? தவிரவும், இந்தப் பாதத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீ சங்கராசார்யர் சொல்லியிருக்கும் வாக்யத்திலிருந்து, 'இம்மாதிரியான ஆகம நிராகரணங்களும் இந்தப் பாதத்திற்கு ஸங்கதம்' என்று அவர் அபிப்ராயப் படுவதாகவே நாம் அறிகிறோம். "தயா யுக்திமாஜஸ ஸஂஹவெத ஸவஜ்ஞஹாஷிதஸாஹ்ய ஸ்ரூதா தெஷ்ஷிதஹதஸ்ஊவாஸதொவவாஷதாய ப்ரயதஹெ" என்பது அவர் வாக்யம். 'யுக்திகளால் நிறைந்துள்ள வேதவிருத்த பரமதங்களும் ஸர்வஜ்ஞனால் பாஷிதங்களென்று சொல்லப்படும் வேத விருத்த பரமதங்களும் நிரஸநார்ஹங்கள்' என்னும் அர்த்தம் அந்த வாக்யத்திலிருந்து ஏற்படுகின்றது. ஆகையால், சைவ ஆகமம் முதலிய ஆகமங்களின் நிராகரணமும் இவ்விடத்தில் ஸங்கதமென்றே ஸ்ரீ சங்கராசார்யர் அபிப்ராயப் படுவதாகச் சொல்லவேண்டும்.

ஆனால், இந்த அதிகரண பாஷ்யத்தின் ஆரம்பத்தில், "ஊஷாநீஂ ஊாஹெமஸ்ரா: ப்ரதிக்ஷிவஹெ" என்று சொல்லாமல், "ஊஷாநீஂ கெவஞா

யிஷாத்ரு ஸார காரணவர்ஜ: ப்ரதிஷித்யதே " என்று ஸ்ரீ சங்கராசார்யர் ஏன் சொல்லி யிருக்கிறார்? என்று கேட்கலாம். அவர் அப்படிச் சொல்லி யிருப்பது, மாஹேச்வரர்களுடன் ஸேச்வர ஸாங்க்யர்களையும் சில வைசேஷி கர்களையும் சேர்த்து நிராகரிப்பதற்காகவே தவிர, மாஹேச்வரர்களுள் சிலரை விலக்குகிறதற்காக வன்று என்று நமக்குத் தோன்றுகின்றது. ஸங்கதியை ஸூசிப்பிக்கும் பொருட்டு ஆரம்பத்தில் ஸாமாந்யமாக ப்ரஸ்தா வித்து, பிறகு உபபாதநத்தில் விஷயத்தை விசேஷித்துநிர்த்தேசிப்பதான ஒரு ஸம்ப்ரதாயத்தை ஸ்ரீசங்கராசார்யர் அநுஸரிக்கிறாரென்று நாம் நினைக்கிறோம். பாஞ்சராத்ராதிகரணத்தில் பாஞ்சராத்ரிகள் மாத்ரம் விஷயமாக இருக்கையி லும், அவதாரிகையில் அந்த விஷயத்தை விசேஷித்துச் சொல்லாமல், "யேஷாம் ப்ரக்ருதிஸ்சாயிஷ்டாதா ச உபயாத்மகம் காரணமீச்வரோபிமத தேஷாம் பக்ஷ: ப்ரத்யாக்யாயதே " என்று ஸாமாந்யமாகவே சொல்லியிருக் கிறார். இவ்விடத்தில் இவ்விதம் ஸாமாந்யமாகச் சொல்வது பெரியதொரு ஆக்ஷேபத்திற்கு ஆஸ்பதமாக இருக்கையிலும், அவர் அப்படிச் சொல்லியிருப் பதைப் பார்க்கும் பொழுது, ஒரு அதிகரணத்திற்கும் மற்றொரு அதிகரணத் திற்குமுள்ள ஸங்கதியை ஸூசிப்பிக்கிறதற்காகவே அவர் அம்மாதிரி சைலியை அநுஸரிக்கிறார் என்று நமக்குத் தோன்றுகிறது.

ஸ்ரீ கண்டருடைய ஸூத்ர வ்யாக்யாநம் ஸ்ரீ சங்கராசார்யருடைய அபிப்ராயத்தை அநுஸரிக்கின்றது என்று சொல்வது நிராக்ஷேபமாக எல்லா ராலும் ஒத்துக்கொள்ளப்படவில்லை. 'அவர் ஸூத்ரங்களை ஸகுண ப்ரஹ்ம ப்ரதிபாதகங்களாக வ்யாக்யாநம் செய்திருந்தால் அது மந்தாதிகாரி களை உத்தேசித்துச் செய்யப்பட்டது' என்பது ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர்களுடைய அபிப்ராயமாக இருக்கலாம். வேறு பல வித்வான்கள் அந்த அபிப்ராயத்திற்கு இணங்காமலே நிற்பதை நாம் அறிவோம். ஆகையால், ஸ்ரீகண்டருடைய அபிப்ராயத்தை ஆதாரமாகக்கொண்டு ஸ்ரீ சங்கராசார்யருடைய அபிப்ராயத் தை ஊஹிக்க ப்ரயத்நப்படுவது யுக்தி யுக்தமாகமாட்டாது. இவ்விதம் ஸ்ரீ சாஸ்த்ரிகளின் நிர்ணயத்தைப் பாதிக்கும் பல ஹேதுக்கள் தென்படுகிறபடி யால் அந்த நிர்ணயம் தோஷ துஷ்டமென்றே நாம் நினைக்கிறோம்.

அடுத்த ஸம்சயம், ஸ்ரீச்ருத ப்ரகாசிகாசார்யருடைய உக்திகளுக்கு அத் வைதிகள் சொல்வதாக ஸ்ரீசாஸ்த்ரிகள் சொல்லும் ப்ரதிவசநங்களைப்பற்றியது. ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யர், இந்த ப்ரகரணத்தில், " நிமித்தமாத்ரேச்வரவாதம் நிராகிர்ஷுதா நகேவலம் அநுமாநமேவ கிந்து தந்மூலமாகமோபி நிராகார்ய: " (நிமித்தமாத்ர ஈச்வர வாதத்தை நிராகரணம் செய்பவர்கள்,



அநுமாநத்தை நிரஸிப்பதுடன் அந்த அநுமாநத்திற்கு மூலபூதமான ஆக மத்தையும் நிரஸிக்க வேண்டியவர்களே) என்று சொல்லிவிட்டு, பிறகு, " ஏவம் உபயோரபி த்வயோர்நிரஸநீயத்வே ஸதி, அநுமாநம் ப்ராதாந்யேந ஸூத்ரகாரேண நிரஸநீயம்; தந்நிரஸநேந விநா ப்ராமாண்யாநவகாசாத் " (இப்படி இரண்டும் நிராகரணத்திற்கு அர்ஹங்களாகும் பொழுது, அநுமாநமானது சாஸ்த்ராரம்பத்திலேயே நிரஸிக்கப்பட்டிருக்கவேண்டும்; அது நிரஸிக்கப்படாவிட்டால் சாஸ்த்ராரம்பமே அநுபபந்நமாகி விடு மன்றோ?) என்று வாதித்திருக்கிறார். இதற்கு இவ்விடத்திற் சொல்லப்பட் டிருக்கும் ப்ரதிவசநமாவது, 'சாஸ்த்ராரம்பம் அநுமாநத்தின் அப்ராமாண்யத் தைச் சார்ந்ததன்று; ஆனால், அது ச்ருதி வாக்யங்களுக்குள் ஆபாதத: தோன்றும் பரஸ்பர விரோதங்களைச் சார்ந்ததே' என்பதுதான். இப்படிச் சொல்வது வஸ்து ஸ்திதிக்கு விருத்தம். ஸூத்ரங்கள், முதலில், 'ஈச்வர ஸாதநத்தில் அநுமாநம் ப்ரமாண மாகமாட்டாது' என்பதை ஸாதித்து விட்டு, பிறகு, ச்ருதி வாக்யங்களைக் கொண்டே ஈச்வரனை ஸாதிக்கவேண்டு மாதலால் அந்த ச்ருதி வாக்யங்களை ஸமந்வயம் செய்ய வேண்டு மென்று அந்த ஸமந்வயத்தில் ப்ரவ்ருத்திக்கின்றன. ஆகையால், வேதாந்த சாஸ்த்ராரம்பமானது அநுமாநத்தினுடைய ப்ராமாண்யம் நிரஸ்தமானால் மாத்ரம் உபபந்நமாகும். ப்ரஹ்மம், அநுமாநம் முதலிய மாநாந்தரங்களால் ஸித்திக்கும் பக்ஷத்தில், இந்த வேதாந்த சாஸ்த்ரத்தை எதற்காக ஆரம்பிக்கவேண்டும்? அநுமாநம் ப்ரமாணமன்று என்பதை ஸாதித்தபிறகன்றோ ஸமந்வயம் ப்ராப்தமாகின்றது? ஆகையால், "அநுமாநநிரஸநேந விநா ப்ராமாண்யாநவகாசாத் " என்னும் ஸ்ரீ ச்ருதப்ர காசிகாசார்யருடைய வாக்யத்தில் எவ்வித தோஷமும் நமக்குப் புலப்பட வில்லை. இவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கும் ப்ரதிவசநம் எப்படி ப்ரதி வசநமாகின்றது என்பதும் நமக்கு விளங்கவில்லை. ஒருகால், 'அநுமாந நிர ஸநம்' என்பதால், ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யர், ச்ருத்யர்த்தாநுக்ராஹக தர்க்க நிரஸநத்தையாவது ச்ருதிவாக்யங்களின் ஸமந்வயத்தைச் செய்வதற்கு அபே க்ஷிதமான தர்க்கத்தின் நிரஸநத்தையாவது விவக்ஷிக்கிறாரென்னும் அபிப்ரா யத்துடன் இந்த ப்ரதிவசநம் சொல்லப்பட்டிருக்கின்றதோ வென்னில், அம் மாதிரியான அபிப்ராயம் ஸம்பவித்திருக்க மாட்டாதென்றே நாம் நம்புகி றோம். ந்யாய விசார ஜடிலமாயுள்ள ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யருடைய க்ரந் தம் அம்மாதிரியான அபிப்ராயத்திற்கு எப்படி இடம் கொடுக்கும்? " வேதாந்தவாக்ய குஸுமக்ரதநார்த்தத்வாத் ஸூத்ராணாம் " இத்யாதி

யான ஸ்ரீ சங்கராசார்ய வாக்யங்களின் ஸங்க்ரஹம் என்ன ப்ரயோஜநத்தை உத்தேசித்துச் செய்யப்பட்டிருக்கின்றது என்பது நமக்குத் தெரியவில்லை.

இரண்டாவது "நிர்ணீதாப்ராமாண்யேஷு ச்ருதிவிருத்தேஷ்வாகமேஷு விரோதாதிகரணந்யாயேந தத்ப்ரதிக்ஷேபவையர்த்யமிதி சேந்ந தஸ்ய வாம அநாத்ருதத்வாதவச்யவக்தவ்யத்வாச்ச" (ச்ருதி விருத்தங்களாயுள்ள ஆகமங்களெல்லாம் பூர்வ மீமாம்ஸையில் காணப்படும் விரோதாதிகரண ந்யாயத்தால் ப்ரதிக்ஷேபிக்கப்பட்டிருக்கையில், மறுபடியும் இவ்விடத்தில் அந்த ஆகம ப்ரதிக்ஷேபம் புநருக்தமாகாதோ வென்னில், அப்பொழுது பாஞ்சராத்ர ஆகம விசாரமும் இவ்விடத்தில் அப்ராப்த மாகவேண்டுமன்றோ?) என்னும் ஸ்ரீ ச்ருதப்ரகாசிகா சார்யருடைய சோத்யத்திற்கு எவ்வித பரிஹாரத்தையும் சொல்லாமல், ஸ்ரீ சாஸ்த்ரிகள், அதை அநாதரித்துவிட்டு, ப்ரக்ருதத்திற்கு ஸம்பந்தமில்லாத மற்றொரு அம்சத்தில் அத்வைதிகளாற் செய்யப்பட்டுள்ள ஒருவித தோஷோத்காடநத்தைச் செய்துகொண்டு, அந்தத் தோஷோத்காடநத்தால் ஸமாதாநத்தை அடைகிறார். இது ப்ரதிவசநமாகுமோ?

அவர்கள் சொல்லும் தோஷம் என்னவென்றால், 'ச்ருதிவிருத்தமான ஆகமம், பூர்வமீமாம்ஸையில், விரோதாதிகரண ந்யாயத்தால் ப்ரதிக்ஷிப்தமாகின்றது என்று ஸ்ரீச்ருதப்ரகாசிகாசார்யர் க்ரஹித்திருப்பதாகத் தெரிகிறது. அது அபத்தம்; ஏனென்றால், பூர்வமீமாம்ஸையில், ச்ருதி விருத்தங்களான ஆகமாதிகளின் ப்ராமாண்யம் விரோதாதிகரணத்தால் நிராகரிக்கப்படவில்லை; விரோதாதிகரணம், ச்ருதிகளுக்கு விருத்தமாயுள்ள ச்ருதி ஸம்பந்தங்களான சாஸ்த்ரங்களின் ப்ராமாண்யத்தை மாத்ரம் நிரஸிக்கின்றது; ச்ருதி ஸம்பந்தமில்லாத வேறு சாஸ்த்ரங்கள் ச்ருதி விருத்தமாக இருந்தால், அவைகளின் ப்ராமாண்யம் சிஷ்டாகோபாதிகரணம் என்னும் மற்றொரு அதிகரணத்தாலேயே நிராகரிக்கப்படுகின்றது; ஆகையால் ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யர் இவ்விடத்தில் தவறிவிட்டார்' என்பது தான். இதன் தத்வத்தைத் தெரிந்துகொள்ள, நாம், பூர்வமீமாம்ஸையில் காணப்படும் விரோதாதிகரண ந்யாயம் என்ன என்பதை முதலில் அறியவேண்டும். 'வஸ்துவின் தத்வத்தை உணர்த்தும் விஷயத்தில் ஸ்ம்ருதிகளென்று சொல்லப்படும் க்ரந்தங்களுக்குப் பரஸ்பரம் விரோதம் காணப்பட்டால், எது ப்ரமாணமாகும்?' என்று ஸந்தேஹம் வரும்பொழுது, இரண்டும் ப்ரமாணம் என்று சொல்வது அஸங்கதமாகையால், 'ச்ருதிக்கு விருத்தமில்லாமல் இருக்கும் ஸ்ம்ருதியே ப்ரமாணம்; ச்ருதிக்கு விருத்தமாக இருப்பது ப்ர



மாணமாக மாட்டாது' என்பதுதான் விரோதாதிகரண ந்யாயம். 'ஸ்ம்ருதிகளெல்லாம் ச்ருதியை மூலமாக உடைத்தாயிருக்கின்றன' என்பது நமது கொள்கையாக இருக்கையிலும், எங்கெந்த ஸ்ம்ருதிகளில் ச்ருதி விரோதம் தென்படுகின்றதோ அந்தந்த ஸ்ம்ருதிகள் நமக்கு க்ராஹ்யமல்ல வென்பதுதான் இவ்விடத்திற் சொல்லப்பட்டதாகின்றது. "விரோதே த்வநபேக்ஷம் ஸ்யாத் அஸதி ஹ்யநுமாநம்" என்பது ஸூத்ரம். இதன் அர்த்தமாவது:—விரோதே—க்லுப்தமான ப்ரத்யக்ஷ ச்ருதிக்கு விரோதம் ஸம்பவித்தால், அநபேக்ஷம் ஸ்யாத்—அப்படி விரோதிக்கும் ஸ்ம்ருதியின் ப்ராமாண்யம் அநபேக்ஷமாகும் (அதாவது—ஹேயமாகும்), (ஏனென்றால்) அஸதி—அப்படிப்பட்ட விரோதம் இல்லாமலிருக்கும் பொழுதன்றோ, அநுமாநம்—ச்ருத்யநுமாநம் ஏற்படும்? அதாவது—'ச்ருதியை மூலமாக உடைத்தாயிருப்பதே ஸ்ம்ருதிகளுக்கு ப்ராமாண்ய ஹேது. அந்த ச்ருதி மூலத்வம் சில ஸ்ம்ருதிகளுக்கு ப்ரத்யக்ஷமாக க்லுப்தமாயிருக்கும்; அந்த ஸ்ம்ருதிகளுக்கு ச்ருதி விரோதம் இல்லையாகையால் அவை எப்பொழுதும் ப்ரமாணமே. மற்றும் சில ஸ்ம்ருதிகளுக்கு ச்ருதி மூலத்வம் ப்ரத்யக்ஷமாகத் தெரியாது; அந்த ஸ்ம்ருதிகளும் மஹர்ஷி ப்ரணீதங்களாக இருக்கிறபடியால், அவைகளுக்கும் ச்ருதி மூலத்வத்தை அநுமாநத்தால் ஊஹித்து ப்ராமாண்யத்தைக் கல்பிக்கிறோம். ஆனால், அந்த ஸ்ம்ருதிகளில் வேத விருத்தமான அம்சம் ஏதாவது தென்படும் பக்ஷத்தில் அவைகளுக்கு ச்ருதி மூலத்வத்தை அநுமாநம் செய்வது அஸங்கதம்; ஆகையால் அவைகள் த்யாஜ்யங்களே' என்று சொன்னதாயிற்று. விரோதாதிகரணத்தின் விஷயம் இவ்விதம் இருக்கும் பக்ஷத்தில், ச்ருதி விருத்தங்களான ஆகமங்களின் ப்ராமாண்யம் இந்த அதிகரண ந்யாயத்தால் நிராகரிக்கப்படுகின்றது என்று சொல்வதில் என்ன தோஷம் ஸம்பவிக்கக்கூடும்? 'ஸ்ம்ருதி' என்று சொல்லியிருக்கிறபடியால், வேதோபப்ருஹ்மணமாயுள்ள ஸ்ம்ருதிகளே இவ்விடத்தில் விவக்ஷிதங்கள் என்று சொல்வது ஸாத்யமில்லை; அவைகளுக்கு வேத விரோதம் ஸம்பவிக்க மாட்டாதன்றோ? ஆகையால், வேதோபப்ருஹ்மணங்களாக இல்லாமலும் பரமர்ஷி ப்ரணீதங்களாயுமுள்ள தந்த்ரங்களும் அவைகளை அநுஸரித்து நிற்கும் மற்றை ஸ்ம்ருதிகளுமே இவ்விடத்தில் 'ஸ்ம்ருதி' சப்தத்தால் விவக்ஷிதங்கள். ஸாங்க்யம் முதலான ஸ்ம்ருதிகளையும் நாம் ஸ்ம்ருதிகளென்று வ்யவஹரிக்கிறோமன்றோ? ஸ்ரீ சங்கராசார்யர் ஸ்ம்ருத்யதிகரண பாஷ்யத்தில் 'ஸாங்க்ய ஸ்ம்ருதிக்கு விரோதம் வருகிறபடியால் ப்ரஹ்ம வாதம் த்யாஜ்யமாக மாட்டாதோ?' என்னும் சங்கையைப் பரிஹரிக்கும் ப்ரகரணத்தில், இந்த விரோதாதிகரணத்தை ப்ரஸ்தாவித்திருக்கிறார். "விப்ரதிபத்தௌ ச ஸ்ம்ருதீநாம் அவச்யகர்த்தவ்யே அந்யதரபரிக்ரஹே அந்ய

ஸ்மாரிண்யோ: த்வைததய: ப்ராமாண்யாநபேக்ஷ்யா உதாஹ்ரு: । தது³க்தம் ப்ரமாண லக்ஷணே 'விரோதே த்வநபேக்ஷம் ஸ்யாத³ஸதி ஹ்யநுமாநம்' இதி" [ஸ்ம்ருதிகளுக்குப் பரஸ்பரம் விரோதம் வந்தால், வேத விருத்த ஸ்ம்ருதிகளைப் பரித்யஜித்து வேத விருத்த மல்லாதவைகளைப் பரிக்ரஹிக்க வேண்டும். பூர்வ மீமாம்ஸையில் ப்ரமாண லக்ஷணத்தில் அவ்விதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது] என்பது ஸ்ரீ சங்கராசார்யருடைய வாக்யம். இப்படி' வேத விருத்தமான ஸாங்க்யாதி தந்த்ரத்தை அப்ரமாணமென்று நிராகரிக்க விரோதாதிகரணம் ப்ரவ்ருத்தித்தால் வேத விருத்தமான சைவாகமம் முதலியவற்றை ப்ரதிக்ஷேபிக்க ஏன் அது ப்ரவ்ருத்திக்க மாட்டாது? 'ஸ்ம்ருதிகளுக்குள் பரஸ்பரம் விப்ரதிபத்தி நேர்வது ஒரு விஷயம், ஸ்ம்ருதிகளுக்கும் ச்ருதிக்கும் விரோதம் ஸம்பவிப்பது மற்றொரு விஷயம்' என்னில் இரண்டு விஷயங்களிலும் ச்ருதி விரோதமே அப்ராமாண்யத்திற்கு ஹேதுவாகின்றபடியால், ப்ரக்ருத விசாரத்திற்கு அது ஒரு விதத்திலும் பாதிக்க மாட்டாது. தவிரவும், சிஷ்டாகோபாதிகரணத்திற்கு ப்ரக்ருத விஷயத்தில் கொஞ்சமேனும் ஸம்பந்தமில்லை. அந்த அதிகரணம் 'ஒரு ஸ்ம்ருதியில் ஓரிடத்தில் வேத விருத்தமான அம்சம் தென்பட்டால் அந்த அம்சத்தில் மாத்ரம் அந்த ஸ்ம்ருதிக்கு அப்ராமண்யத்தை ஒத்துக்கொண்டு அவிருத்தமான மற்றை அம்சங்களில் அதற்கு ப்ராமாண்யத்தை அங்கீகரிக்கலாமோ?' என்பதை விசாரிக்கின்றது. ஆகையால் ப்ரக்ருத விஷயத்தில் அது ப்ரவ்ருத்திக்கமாட்டாது. வஸ்து ஸ்திதி இவ்விதம் இருக்க ஸ்ரீ சாஸ்த்ரிகள் எவ்விதம் இதைத் தூஷிக்கிறாரென்பது நமக்கு விளங்கவில்லை.

ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யரால் செப்பப்பட்டுள்ள சோத்யம் நமக்கும் துல்யமென்னில், அதற்கு நாம், 'விரோதாதிகரண ந்யாயத்தால் வேத விருத்தமான ஆகமத்தின் அநாதரணீயத்வம் ஸித்தமாக இருந்த போதிலும், பசுபதி மதத்தின் வேத விருத்தத் தன்மையை ஸ்புடமாக ஸ்தாபநம் செய்யும் பொருட்டே "பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்" என்று மறுபடியும் ஆரம்பிக்கப்படுகின்றது' என்று ஸமாதாநம் சொல்லுகின்றோம். விரோதாதிகரண ந்யாயம் ப்ரவ்ருத்தித்தாலும் ப்ரவ்ருத்திக்காவிட்டாலும் வேறு ஒரு அதிகரணம் இந்த விஷயத்தில் ப்ரவ்ருத்திக்கின்றது என்று ஒத்துக்கொள்ளும் ஸ்ரீ சாஸ்த்ரிகள், இந்தப் பாதத்தில் பாஞ்சராத்ரத்தின் பர்யாலோசனை எப்படி ப்ராப்தமாகின்றது என்பதற்கு ஸமாதாநம் சொல்லவேண்டியவராக இருக்கிறார்; அதைச் சொல்லாதவரையில், அவர் சொல்வதாக ஆரம்பித்த ப்ரதிவசநம் அஸமஞ்ஜஸமாகவே நிற்கும். விஸ்தர பயத்தினால் நாம் இதனுடன் விரதராகிறோம்.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# பகவானுடைய ஜகத் காரணத்வம்.

(ஸ்ரீ உப. தேவனார் விளாகம் லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர்.)

(முன் தொடர்ச்சி. பக்கம்—65)

மற்றும் 'பாருநீ ரெரிகாற்றினோ டாகாசமு மிவையாயினான்' 'அம்பரமனல்கால் நிலம் சலமாகி நின்ற வமரர் கோன்' 'திங்களப் புவானெரி காலாகி' இத்யாதிகளால் திருமங்கையாழ்வாரும்; 'மண்ணொடு நீரு மெரியும் காலும் மற்று மாகாசமு மாகிநின்றாய்' என்று பெரியாழ்வாரும், 'இறையு நிலனு மிருவிசும்பும் காற்றும் அறைபுனலும் செந்தீயு மாவான்' 'வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய் தேனாகிப் பாலாந் திருமாலே' 'அவன் கண்டாய் காற்றுத் தீ நீர்வான் கருவரை மண் காரோதச் சேற்றத்தீ யாவானும்' 'இரு நிலனும் மால்விசும்பும் காற்றும் நெருங்கு தீ நீருருவுமானான்' 'தானே எரிசுடரும் மால்வரையும் எண்டிசையும் அண்டத் திருசுடருமாயவிவை' என்று செஞ்சொற் கவிகளான முதலாழ்வார்களும் அருளிச்செய்தார்கள்.

நம் பூர்வாசார்யர்களும் 'காரணமாய்க் காரியமாய்க் கண்டிடுமிவ் வுலகத்தில் பூரணமாய் உறைகின்ற புண்ணியனும்' என்றும், 'அனைத்துலகுமவனேயாம்............நல்ல மறை யுளமிதுவே' என்றும் வேதாந்த ஸித்தமான ஜகந் நிமித்தோபாதாநத்வத்தை அநுவதித்தார்கள். இதைக் கணிசித்தே 'உக்தம் ப்ராசீநகாஸ்யை ப்ரதித ஹிதயயோ: ஐகத்யஸ்யாம் ஸமாம் ஸைவைஷ வஸ்துகேஷு ப்ரதீதம் வர்த³ம்' என்று அநுஸந்தித்தார்கள்.

இவ்வளவு அர்த்தங்களும் ஸர்வருக்கும் எளிதில் புரியுமாறு நம் தேசிகன் பரமதபங்கம் என்கிற ரஹஸ்ய க்ரந்தத்தில் பரதத்வாதிகாரத்தில் ஸங்க்ரஹித்தருளினர். "இப்படி ஸத்ய ஸங்கல்பனாய் ஸர்வகார்ய காரணமான ஈச்வரனுண்டானாலும் பல ச்ருதி ஸ்ம்ருதிகளினுடைய ஸ்வாரஸ்யத்தாலும் லோக த்ருஷ்டி ப்ரக்ரியையாலும் இவன் நிமித்த மாத்ரமாம் அத்தனையன்றோ? உபாதாநம் ப்ரக்ருத்யாதிகள் ஆக வேண்டாவோ? இங்ஙனல்லாத போது விகாராதி தோஷங்களும் வாராவோ? என்று யோக பாசுபத வைசே

ஷிகாதி ஸித்தாந்தங்கள் சொல்லுமது, ச்ருத்யாதிகளில் ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்த ஸஹகாரோபலக்ஷண வநவ்ருக்ஷாதிநிதர்சந ஸூக்ஷ்மகாரணாவஸ்தயோதி ஸம்ப்ராதிகளினாலே நிரஸ்தம். லோகத்திலும் நிமித்தோபாதாந பேதங்கண்டாப்போல நிமித்தோபாதாநைக்யத்தையும் சேதநாசேதநங்களிரண்டிலும் ஸ்வ வ்யாபாரத்தால் ஸ்வகதாவஸ்தா விசேஷங்கள் வருமிடங்களெல்லாவிடத்திலும் காணலாம். நிமித்தமாத்ர ஈச்வரவாதிகளுக்கும் ஸம்ஸ்ருஷ்டவேத ஸம்யோகமாத்ர நித்யமாணங்களில் ஈச்வரனுக்கு உபாதாநத்வமுமிசையவேணும். அப்போ உபாதாந த்ரவ்ய சரீரகனைப் கொண்டு உபாதாந சப்த வாச்யனானல், பாலன் யுவாவாம்போது ஆத்ம ஸ்வரூபத்தில் பால்ய யௌவநங்கள் கண்டதைப் போலே நாமாந்தர பஜநார்ஹ விகார விசேஷங்களும் க்லேசாதிகளும் ஈச்வர ஸ்வரூபத்தில் தட்டாமையாலே நிர்விகாரத்வ ச்ருதி விரோதமில்லை. ஸோபாதிகயா ஸர்வஸ்வாதக இத்யாதிகளுக்கும் ஊர்ணநாபி முதலான ச்ருதி சொன்ன த்ருஷ்டாந்தங்களுக்கு மிப்படி தாத்பர்யங் கண்டு கொள்வது என்று ஸங்க்ரஹித்தருளினர்.

இப்படி ஸகல ஜகதேக காரணனான ஸர்வேச்வரனே பக்தி ப்ரபத்திகளினால் ப்ரஸந்நனாய்க் கொண்டு ஸர்வ புருஷார்த்தத்தையும் கொடுக்கிறான் என்று வேதாந்த சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இதில் ஏதாவது ந்யூநாதிரேகங்களிருந்தபோதிலும் குணைகவிநிவேசித மாநஸர்களான பெரியோர்கள் 'வக்த்ருஸ்ஸ்வாதந்த்ரோஸ்தி விமதாஸ்ய ஸாத்யா ஸந்த ஸ்வரஸந்த ஸதேவ ஹ்ருதயே:' என்கிறபடி அங்கீகரித்து, 'ஸாதவ்ஸ் ஸந்தோவித வ்யபதிதோஷம்' என்கிற கணக்கிலே தோஷத்தைத் தள்ளிக் குணத்தைக் க்ரஹித்து பாலஸைத்ய ஸாஹஸத்தையக்ஷமித்தருளவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

ஜுஷ்டம் ஸத்ஸு ப்ரதாய ப்ரவசந க்ஷமயா ஆயதஸம்ப்ரிக்ஷிதாய:
நாநா யுக்தீந்த்ரவிஷ்ணோ வேதயுக்ந ஸம்ஹிதா காரணத்வம் ஸதாஸே: ।
க்ருதாரபெதாக்ஷ க்ருபணா கபதிஹயதி ஸுத்ரோக்தணாஸதேஹேண
ஹீயஸ்வேதாஹி ஸம்யக் நிரவயிக்ருவயா ஆநந்த ம்ருணாநந்த: ॥

ஸ்ரீ:

# மநுஸ்ம்ருதி.

(ஸ்ரீ. உப என். ஸ்ரீநிவாஸாசாரியர் பி. ஏ., பி. எல்.,)

ராஜீய விஷயங்களிற் பலர் பல பல நோக்கங்களைக் கொண்டும் வாஸ்தவமாகவோ அல்லது தத்தமக்கு அநீதமென்னும் தோற்றத்தினுல் ஒருவாறு உண்டாகக் கூடிய ப்ரமத்தினாலோ நமது பூர்வீக ஒழுக்கங்களையும் மத ப்ரவர்த்தகர்களையும் கடிந்து பேசியும் அவமதிப்புச் செய்தும் வருகிறார்கள். ஸமீபத்தில் தென் ஜில்லாக்களில் சிலர் மநுரிஷியின் பேரிற் சினங்கொண்டு பஹிரங்க ஸ்தலத்தில் மநுஸ்ம்ருதியின் சில பிரதிகளைத் தீக்கிரையாக்கினதைப் பத்ரிகைகளில் யாவரு மறிவார்கள். கோபத்துக் காளாகாமல் சற்று ஆலோசித்திருப்பார்களாகில் அவர்கள் அப்படிச் செய்திருக்க மாட்டார்கள். அத்தகையவர் மநுஸ்ம்ருதியை ஒரு தடவையாவது ஊன்றிப் படித்திருக்க மாட்டார்கள் என்பது திண்ணம். ஏனையோர்களும் பிராம்மணர் உள்பட, ஸங்கதி புரியாமலே மநு ப்ராம்ஹண பக்ஷபாதி யென்றும், தாழ்ந்த வர்ணத்தவரைக் கிளம்ப வொட்டாமல் அமுக்கினவ ரென்றும், இப்படிகளில் ஆதாரமின்றியே வீண் வாதங்களைச் செய்து வருவது பிரஸித்தம். ஆஸ்திகர்கள் மித்ர நண்பர்கள் இவைகளினால் கலக்கமும் மனவருத்தமும் அடைவதற்கு இடமுண்டாதலில், அவர்கள் தெளியும் பொருட்டு மநுஸ்ம்ருதியின் உபதேச ஸாராம்சங்களை வெளியிடலாமென் றெண்ணி, அதற்கு முகவுரையாக இந்த வ்யாஸ மெழுதலானேன்.

பாரத நாட்டின் வேதவேதாந்த மதங்களிற் சொல்லப்பட்ட அறம் பொருள் இன்பம் வீடெனப்படும் புருஷார்த்தங்கள் வேண்டும். நான்கு பெரும் பயன்களுக்கும் அடிப்படையானது அறம் அல்லது தரும மென்பது. இது ப்ரவ்ருத்தி யென்றும் நிவ்ருத்தி யென்றும் இருவகைப்படும். பொருளையும் இன்பத்தையும் இஹலோகத்திலும் பரலோகத்திலும் ஸாதித்துக் கொடுக்க வல்ல தர்மங்கள் ப்ரவ்ருத்திகள். வீடு அல்லது மோக்ஷ மென்னும் பெரும் பதத்தைப் பெற நடத்தப்பட வேண்டியவை நிவ்ருத்தி தர்மங்கள். தர்மத்தை யொழித்துக் காமம் பெற முயன்ற ராவணன் கதியைக் கண்டோம். அங்ஙனமே தர்மமல்லாத வழியில் பொருள் பெறத் துணிந்த துர்யோதநாதிகளும் தமதொழுக்கத்துக் கேற்ற துர்க்கதிகளை யடைந்தார்கள். கடவுள் காட்டிக்

கொடுத்த வேதேனுமொரு நல்வழி நடந்தாலல்லது அவன் கருணைக் கிலக்காவதும் அவன் பதமாகிய மோக்ஷத்தைப் பெறுவதும் கிடையாதன்றோ! எனவே, தர்ம ஸ்வரூபத்தை உள்ளபடி யறியவேண்டியது இன்றியமையாத தாயிற்று. அது கொண்டே உலக வாழ்க்கையிலும், தேசத்தில் ஜநங்கள் பரஸ்பரம் நடந்து கொள்ளவேண்டிய வ்யவஹாரங்களிலும், உரிமை கடமை என்பது போன்றவைகளிலும் ஒழுங்குகள் ஏற்படவேண்டும்.

தர்மத்தை நிர்ணயிப்ப தெப்படி யென்ற கேள்வி உடனே தோன்றுகின்றது. இதற்குப் பல விதங்களான விடைகள் உண்டு. அவற்றின் வித்யாஸங்களை விடுத்துக் கவனித்தால் வெகு ஜநங்களின் நன்மைக்குக் காரணமாய் ஒத்தாசையா யிருப்பது தர்மம். அதற்கு விரோதமானது அதர்மம் என்பது பொதுவாய் எவரும் ஒப்புக்கொண்டதாகப் புலப்படுகின்றது. உலக வாழ்வுக்கு இது போதுமான உபதேசமே. ஒவ்வொருவனும் தனது ஆத்ம ரக்ஷணத்துக்காகவும் பரலோக ப்ராப்திக்காகவும் நாடக்கடவ தர்மங்கள் இவ்வளவு எளிதில் புலப்படத்தக்கவையல்ல. இறைவனை யவைகளுக்கு வழிகாட்டி அவ்வழிக்கு அவன் கொடுத்த சாஸ்த்ரங்களே கைவிளக்குகள். இவ்விளக்குகளும் மற்ற உலக விளக்குகளைப்போல் வெவ்வேறு விதங்களா யமைந்துள. ஆகிலும் அவை உலக அநுபவங்களுக்கும் உலக நடவடிக்கைகளுக் கேற்ற தர்மங்களுக்கும் விரோதியாவென்பது திண்ணம்.

இவ்விருவகைத் தர்மங்களும் உலகம் படைத்த கருணைக்கடலான கடவுளினாலேயே ஆதியில் உலகத்தாருக் குபதேசிக்கப்பட்டன வென்பது நமது மதக் கொள்கை. எந்த மதத்திலும் கடவுள்தான் தர்மத்துக்கு மூல காரணம். வேதமென்பது கடவுளின் அத்தகைய ஆணையும் உபதேசமு மடங்கியது. அதிலடங்கிய ப்ரவ்ருத்தி தர்மங்களை மரீசி, அங்கிரஸ், புலஸ்த்யர், க்ரது, ப்ருகு, வஸிஷ்டர், தக்ஷர், நாரதர் முதலிய ரிஷிகள் பரவச் செய்தார்கள். அவர்கள் மூலமாய்த் தான் உலகில் எல்லா ப்ரஜைகளு முண்டானார்கள். நிவ்ருத்தி தர்மத்தை ஸநகர் ஸநந்தநர் முதலிய ரிஷிகள் நடத்திப் போந்தார்கள். மரீசி முதலிய ரிஷிகளின் ப்ரவ்ருத்திகள் போதவில்லையென்று யோசித்து ஸ்வயம்புவான பகவானே தன் ஸங்கல்பத்தாலே தன்னை இரண்டுரு வாக்கிக்கொண்டாரென்றும், அதில் தோன்றிய ஆணுருவே ஸ்வாயம்புவ மநுவென்றும், பெண்ணுரு சதரூபை யென்கிற அவர் மனையாட்டியென்றும், இந்தத் தம்பதிகளிடமிருந்தே பின்னர் உலகப் பிறப்பெல்லா முண்டானதென்றும் புராணக் கொள்கை. இம்மநு தமது வம்சத்திலுண்டான ப்ருகு முதலிய ரிஷிகளுக்கு உலக நிலையின் நன்மையை நாடிச்செய்த தர்மோபதேசங்களே மநு ஸ்மிருதி யெனப்படும்.



மநுநீதிகளின் ஏற்றம் வேதத்திலேயே 'மநு மொழிந்தது யாதொன்றும் அருமருந்தாகும்' என்று பேசப்பட்டது. இக்காலக் கல்வி யுணர்ச்சிக்கு மநுநீதிகளிற் சில ருசிக்காமலிருக்கலாம். ஜாதி வித்யாசங்கள் என்பது முதற் பார்வைக்கே விபரீதமாகக் காணலாம். மநு காலத்துக்கு உரித்தானவையே யாகிலும், அவர் கூறும் கட்டளைகளிற் சில இக்கால வர்த்தமாநங்களுக்கு ஒவ்வாதிருக்கலாம். இவ்வித ஆக்ஷேபங்களுக் கெல்லாம் இடங் கொடுத்தாலும், ஆத்யந்தமாக மநுநூலைப் படித்தால், இதிலடங்கியவற்றை விட உயர்ந்த படிகளில் ஐஹிக ஆமுஷ்மிக தர்மங்களை வேறு மத உபதேசங்களிலாவது வேறு தேச வ்ருத்தாந்தங்களிலாவது காண முடியாது. தர்மமென்பது காலதேச வர்த்தமாநங்களையும் அவ்வோர் ஸமயங்களின் நிபந்தனைகளையும் ஆவச்யகதையையும் பொறுத்து மாறுவதென்றாலும்கூட, ஆஸ்திகர்கள் அதில் மாறுபாட்டுக்குத் தகாததும் ஸத்யத்தை யுள்ளடக்கியதும் ஆண்டவனுக் குகப்பானதுமான பாகம் ஒன்றை முக்யமாக எம்மதத்திலிருந்தும் அங்கீகரிப்பார்கள். இதுதான் ஸநாதந தர்மமென்பது. இது முக்காலத்திலும் ஒரே ரூபமாய் நிலையாயிருக்கும். இதற்குக் கட்டுப்படுவதினால் தான் அவரவர் பொருளென்றும், பெண்டு பிள்ளைகளென்றும் சொல்லப்படும் வரம்புகளும் அவற்றுக்கு மதிப்பும் ராஜ்யத்தில் ரக்ஷணமும் ஏற்படுவது. அன்றேல் வலுத்தவன் இளைத்தவனை விழுங்குவதுதான் பொதுதர்மமாகும். தற்காலம் மேனாடுகளில் வழங்கிவரும் ஸோஷியலிஸம் (பொது உடைமை நுகர்ச்சி) முதலான ஸித்தாந்தங்கள் இதற்கு உதாரணங்கள், எல்லாம் எல்லாருக்கும் பொதுவாய்ப் பாத்யப்பட்டவைகள் என்பது போன்றவைகளின் கொள்கைகள் இவை. ஸநாதநமான (சாச்வதமான) தர்மமொன்றுண்டென்றும், பிறர் சொத்தை யபஹரிப்பது அதர்மமென்றும், அவர்கள் நினைப்பதில்லை போலும்! நிற்க, மேற்கூறியபடியான முக்காலத்தும் மாறாது மற்றைத் தர்மங்கள் யாவற்றுக்கும் அஸ்திவாரமாய் நிற்கும் ஸநாதந தர்மங்களை மநு உபதேசிக்கும் ப்ரகாரங்களை யுணர்வது மிகப் பயன்படும். இவற்றைச் சுவைத்தால் தற்கால உணர்ச்சிக்குப் பொருந்ாதவையாய்த் தோன்றும் சிறிது இடங்களைக் கவனிக்கவேண்டியிராது; காலக்கடப்பை யநுஸரித்து அவற்றை மாற்றிக் கொள்வதிலும் பாதகமில்லை. அத்தகைய மாறுபாடுகளை மனுவும் மற்ற ரிஷிகளும் ஒப்பியிருக்கிறார்கள். அஸ்திவாரம் நிலையாயிருந்தால் மேற் கோப்புகளை ஸௌகர்யத்துக்குத் தக்கபடி மாற்றிக்கொள்வது உசிதந்தானே. அடிப்படையை பிடித்துவிடுவதன்றோ கவலைக் கிடங் கொடுப்பது! ந[illegible]ரர்கள் இதைச் சற்று மறந்துவிடுகிறார்கள்.

186780

இதை யநுஸரித்து மநுவே இரண்டாவது அத்யாயத்தில் முதலில் தர்மத்துக்கு ஆதாரம் எதுவென்று கூறுங்கால் 'வேதம் முழுவதும், வேதத்தின் பொருளை விளக்க ப்ரவ்ருத்தித்த ஸ்ம்ருதிகளும், ஸ்ம்ருதிகளைச் செய்தவரும் வேதார்த்தங்களை நன்கு யறிந்தவருமான பெரியோர்களுடைய அநுபவமும் அநுஷ்டாநமும் தர்மத்துக்கு மூலங்களாகக் கடவன' என்றறுதியிட்டார். இதனால் வேதங்களில் விளக்கப்படாத சில, ஸ்ம்ருதிகளா லறியப்படுமென்றும், இவை யிரண்டாலும் அறியப்படாதவற்றுக்கு, அவற்றின் பொருள்களை அநுபவ பூர்வமாக அறிந்தவர்கள் தம் மநஸ்ஸாக்ஷிக்கு ஒப்பி ஆக்ரஹம் முதலிய தோஷங்களுக்கு உட்படாமல் நடத்தும் நடவடிக்கைகளும், அபிப்ராயங்களும் ப்ரமாணமாகலா மென்றதாயிற்று. ஆனால் இவற்றில் ஒன்றுக்கொன்று முரண்படக்கூடா தென்பதும் தீர்ந்த விஷயம். இப்படி அந்தரங்க மநஸ்ஸாக்ஷியே ப்ரமாணமாகக் கடவதான தர்மங்கள் சில, கால க்ரமத்தில் மாறுபாடு அடையலா மென்று ஏற்பது உசிதம் தான். ஆகிலும் இம்மநஸ்ஸாக்ஷி யென்பது மூலாதாரமான வேத அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்டிருந்தாலல்லது தர்மமாகாது. ஸாதாரணமாய் மநஸ்ஸாக்ஷி யென்பது பழக்கத்தாலும், பிறப்பிடத்தாலும், ஸஹவாஸத்தாலும் இத்தகைய வேறு காரணங்களினாலும் மனிதரிடத்திற் பல விதமாகக் காணப்படும். ஒருவனுக்கு மநஸ்ஸாக்ஷியினால் நன்றென்று தோற்றுவது மற்றவனுக்குத் தீதென்று புலப்படலாம். எல்லாருடைய மனதுக்கும் ந்யாய மென்று தோன்றக்கடவதான தர்மம் ஆஸ்திக்யத்தாலும் சாஸ்த்ர உபதேசத்தாலுமே உண்டாக வேண்டும். மநுஸ்ம்ருதி முதலியவற்றைப் பராமர்சிக்கும்போது இம்மேற்கோளை மறக்கக் கூடாது.

(இன்னும் வரும்.)

---

ஸ்ரீ:

## ஸ்ரீ. உ.வே. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின்

## உபந்யாஸங்கள்.

---

[ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஆதரவில், சென்ற 1927ஆ டிஸம்பர் மாஸத்தில் மேட்டுப்பாளையம் கோயம்புத்தூர் ப்ராந்தங்களில் வித்வான் ஸ்ரீ.உ.வே. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி பல உபந்யாஸங்களை வெகு அழகாக நடத்தி வருகிறாரென்றும், அங்கிருக்கும் ஆஸ்திக சிரோமணிகள் எல்லோரும் அவற்றை ச்ரத்தையுடன் கேட்டு ஆநந்திக்கிறார்களென்றும் அறிகிறோம். ஆஸ்திக்யம், மோக்ஷோபாயம்,



தேஹாத்ம விவேகம், ஜீவேச்வர விவேகம், புருஷார்த்த விவேகம், பக்தி யோகம், ஸ்த்ரீ தர்மம், வர்ணாச்ரம தர்மம், ராமாயண ஸாரம், தத்வத்ரயம், விசிஷ்டாத்வைத மஹிமை, நித்ய கர்மாநுஷ்டாநம் முதலியவை அந்த ஸ்வாமி செய்தருளின உபந்யாஸங்கள். அவைகளுள் இரண்டு உபந்யாஸங்களின் ஸங்க்ரஹங்கள் ஏற்கெனவே ப்ரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது ஒன்று ப்ரசுரிக்கப்படுகின்றது.

### ஆஸ்திக்யம்.

ஈச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ராணிகள், தேவதிர்யக்மநுஷ்யஸ்தாவரம் என்று நான்கு வகையாயிருக்கின்றன. அவைகளுக்குள் ஸ்தாவர ஜந்மாவானது மிகவும் தாழ்ந்த தென்றும், அதைக் காட்டிலும் திர்யக் கொஞ்சம் உயர்ந்த தென்றும், அதைக் காட்டிலும், மநுஷ்ய ஜந்மா உயர்ந்த தென்றும், அதைக்காட்டிலும் தேவஜந்மா இன்னும் உயர்ந்த தென்றும் சொல்லப்படுகின்றது. இதை "பூதாநாம் ப்ராணிந: ச்ரேஷ்டா:" என்று தொடங்கிக் கூறும் மநு ஸ்ம்ருதியால் அறியலாம். திர்யக் ஸ்தாவர ஜந்மாக்களைக் காட்டிலும் மநுஷ்ய ஜந்மாவானது எந்த விதத்தினால் உயர்ந்த தென்பதை நாம் விசாரிக்கவேண்டியது அவச்யம். ஆஹாரம், நித்ரை, பயம், ப்ரஜாவ்ருத்தி முதலிய கார்யங்களினால் திர்யக்குக்களைக் காட்டிலும் மநுஷ்யன் உயர்ந்தவன் என்று சொல்ல முடியாது. கீழ்ச் சொன்ன கார்யங்களுள் ஆஹாராதிகளில் பேத மிருந்தாலும், திர்யக்குகள் அபிப்ராயப்படி அவைகள் அநுபவிக்கும் ஆஹாரங்கள் உயர்ந்தனவாகவே இருக்கின்றன என்பதை, மேற்படி ஆஹாரங்களில் திர்யக்குகள் வெகு வேகமாக ப்ரவர்த்திப்பதால் நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். உலகத்தில் வஸ்துக்களுக்கு உயர்வு தாழ்வு என்பவை ஒவ்வொருவனுக்கும் வெவ்வேறாகத் தோன்றுவதாலும், ஒரு காலத்தில் ஒருவனுக்கு உயர்ந்ததாகத் தோன்றியது மற்றொரு காலத்தில் அவனுக்கே தாழ்ந்ததாகத்தோன்றுவதாலும், அவை வஸ்துக்களுக்கு ஸ்வபாவ ஸித்தமல்ல. அவரவர்கள் புண்யபாப கர்மாக்களுக்கு அநுகுணமாக ஈச்வரன் வஸ்துக்களை உயர்ந்தவைகளாவும் தாழ்ந்தவைகளாகவும் காண்பிக்கிறான். ஒரு வஸ்து ஒருவனுக்கு உயர்ந்ததாகவும், அதுவே மற்றொருவனுக்குத் தாழ்ந்ததாகவும், அவ்வஸ்து அவனுக்கே மற்றொரு காலத்தில் உயர்ந்ததாகவும் காணும்படி ஈச்வரன் கல்பிக்கிறான். இவ்விஷயத்தைப் பராசர மஹர்ஷி "ததேவ ப்ரீதயே பூத்வா புநர் து:காய ஜாயதே" என்று தொடங்கி, "தஸ்மாத் து:காத்மகம் நாஸ்தி ந ச கிஞ்சித் ஸுகாத்மகம்" என்று பரக்க நிரூபித்தருளினார். ஆக, திர்யக்குகளைக் காட்டிலும் மநுஷ்ய ஜந்மாவினுடைய உயர்வானது விசேஷமான பகுத்தறிவு ஒன்றுமட்டினாலல்லது, வேறொன்றினால் என்று சொல்ல ஸாத்யமில்லை. அதில் முதன்மையான பகுத்தறிவானது, தன்னைப் பற்றினதாக இருக்கவேண்டியது உசிதம். உலகத்தில் தோன்றும் ஒரு வஸ்து ஒருவனுக்கு உடைமையாக இருக்கப் பார்க்கிறோம். அதை அநுஸரித்து இந்தத் தேஹம் "யாருடைய உடைமை? இது 'நான்' என்று சொல்லப்படுகிற வஸ்துவா? அல்லது நம்முடையதா?" என்பதை விசாரிக்குமளவில், 'என்னுடைய வீடு', 'என்னுடைய மாடு' என்று தன்னைக் காட்டிலும் வீடு மாடு முதலியவைகள் வேறாகத் தோன்றுவதுபோல, ஒருவனுக்குத் தன் தலை கால் முதலிய அங்கங்கள் தன்னைக்காட்டிலும் வேறாகவே தோன்றுகின்றபடியாலும், பால்யம் யௌவநம் கௌமாரம் வார்த்தகம் என்கிற பல விதமான பெயரும்

அந்தந்த அவஸ்தையில் பல விதமான ஆகார பேதம் முதலிய பலவித பேதமும் தோன்றுவதாலும், பிஞ்சு காய் பழம் என்று சொல்லப்படும் வஸ்துக்கள் ரூப ரஸாதிகளுடைய பேதத்தால் வேருகத் தோன்றுவன போல இந்தத் தேகமும் பால்யம் முதல் வார்த்தகம் வரையில் வேருகவே தோன்றுவதாலும், பால்ய தேகம் முதல் வார்த்தக தேகம் வரையில் தேகத்தைப்போல் பலவித மாறுதலின்றி 'நான்' என்று ஒரே விதமாக ஆத்மா தோன்றுவதாலும், தேகம் தோன்ருத ஸமயமான ஸுஷுப்தி காலத்திலும் 'நான் ஸுகமாய்த் தூங்கினேன்' என்கிற ப்ரத்யபிஜ்ஞையால் ஆத்மா தோன்றுவதாலும், இந்தத் தேகத்தைக் காட்டிலும் 'நான்' என்று அநுபவிக்கப்படும் ஆத்மா வேருனதே என்று தீர்மானிப்பது முதலானவை பகுத்தறிவாகும்.

இவ்வாருன பகுத்தறிவானது மரம் செடிகளான ஸ்தாவரங்களுக்கும் பசு பக்ஷிகளான திர்யக்குகளுக்கும் இல்லாமையால், அவைகளைக் காட்டிலும் மநுஷ்ய ஜந்மாவானது உயர்ந்ததாகிறது. இவ்வர்த்தம் (ஸ்ரீ பாகவதம் 11-வது ஸ்கந்தம்) "ஸ்ருஷ்ட்வா புராணி" [ஸ்ருஷ்டி காலத்தில் ஈச்வரன் ஸ்தாவரங்களையும் திர்யக்குக்களையும் ஸ்ருஷ்டித்து, த்ருப்தியில்லாமல் ப்ரும்ஹாநுபவத்திற்கு யோக்யரான மநுஷ்யர்களை ஸ்ருஷ்டித்து ஸந்தோஷம் அடைந்தான்.] என்பதாலும் "துர்லபோ மாநுஷோ தேஹ:" என்பதாலும் நன்கு வெளிப்படுகிறது.

இப்படி தேகாத்ம விவேக முண்டானதோடு, ப்ரத்யக்ஷமாய் நாம் ப்ரவர்த்திக்கும் லௌகிக வைதிக காரியங்கள் இஷ்டப்படி பலிக்கக் காணுமையாலும், "யதாவதோ ஸ்ருஷ்டாநி பூதாநி" என்கிறபடியே ஸர்வ ஜந்துக்களும் பராதீநமாகவே இருக்கக் காண்பதாலும், "ஸர்வபூதாநி" என்பது முதலான கீதாதிகளின்படியே இவ்வாத்ம வஸ்துவும் ஸர்வேச்வரனுக்கு அதீநமாகவே இருக்கிறதென்று விவேகிக்கை உசிதமாகும். இதை ஸ்ரீ பராசர பட்டர் "ஸ்வாதந்த்ர்யம்" என்கிற ச்லோகத்தில் பரக்க நிரூபித்தருளினர்.

இப்படிச் சேதநா சேதநங்களான ஸகல வஸ்துக்களும் பரமாத்மாவுக்கு அதீநமென்று தீர்மானித்தாலும், அந்தப் பரமாத்மாவை ஆச்ரயித்து நாம் அடையவேண்டிய பயன் இன்னதென்டதைத் தீர்மானிக்காதபோது இது வ்யர்த்தமாகு மாகையால் அதைத் தீர்மானிக்கவேண்டியது அவச்யம். அவற்றுள் இந்த லோகத்தில் ஐம்புலன்களால் அநுபவிக்கப்படும் சிற்றின்பங்கள் துக்கமூலத்வாதி தோஷ துஷ்டங்க ளாகையாலும், ஸ்வர்க்காதி ஸுகாநுபவங்களும் கீழ்ச்சொன்ன தோஷங்களோடு கூடியிருப்பதுடன் புநர்ஜந்ம மரண வ்யாதிகளுக்கும் இருப்பிடமாயிருக்கையாலே விஷங் கலந்த தேன்போல விவேகிகளுக்கு அநுபாதேய மாகையாலும், கீழ்ச் சொன்ன தோஷ கந்தமின்றிக்கே அந்தமில்பேரின்பத்து அடியரோடு ஆநந்தமயனை பரமாத்மாவை அநுபவித்து, அதன் பரீவாகமாகச் செய்யப்படும் கைங்கர்யமான பரம புருஷார்த்தமே விவேகிகளுக்கு உபாதேயமாகும். இவ்வர்த்தம் "ஸோऽஸ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ" என்கிற ச்லோகத்திலும், "ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம் பாவியேனைப் பல நீகாட்டிப் படுப்பாயோ", "குறுகாநீளா" என்கிற பாசுரங்களிலும் பரக்க நிரூபிக்கப்பட்டது.

இவ்வாறு அந்த ஜீவனுக்கு ஜந்மாந்தரங்கள் உண்டென்றும், கீழ்ச்சொன்னபடியே தேகாத்ம விவேகம் ஜீவேச்வர விவேகம் புருஷார்த்த விவேகம் இவை திர்யக் ஸ்தாவரங்களுக் கில்லாமையாலும், மநுஷ்ய ஜந்மாவுக்கே இவைகளை ஸம்பாதிக்க யோக்யதை இருக்கையாலும், நமது வேதம் முதலான சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட இவ்விஷயங்களை ஸதாசார்ய கடாக்ஷத்தால் அறிந்து, தனது ஆத்மோஜ்ஜீவநத்தில் ப்ரவர்த்திப்பதே மநுஷ்யனுடைய ஆஸ்திக்யத்திற்கு ப்ரயோஜநமாகும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

---

யோऽஹ்ந: ப்ரதிபத்ய வாஸரமுகே ஸம்வத்ஸரம்
ஸஞ்ஜீவயத்யவிபக்திமாந் ஸ்வயம் அநு ।
ஸத்பாத்ரம் ஸதநம் ப்ரவணமநோபவத்
ப்ராணாபஹோ ஹ்யபவதே ப்ரணதாய நம: ॥

---

# பத்ராதிபரின் குறிப்புகள்.

சென்ற மார்கழி மாஸத்தில் மதிராஸில், நமது தேசத்திய மஹா ஜநங்களுடைய அபிவ்ருத்தியின் உபாயங்களைத் தேடும்பொருட்டு அநேக ஸங்கங்கள் நடைபெற்றன. அவற்றுள், ராஜ்ய பரிபாலந ஸம்பந்தங்களான விஷயங்களை விசாரித்த ஸங்கமே மிக ப்ரதாநமாக நடத்தப்பட்டது. அந்த ஸங்கம் நடக்கும் பொழுது பெருங்கூட்டம் கூடினதுடன், அதன் விஷயங்களும் பல பெயர்களால் பஹு ப்ரகாரமாக விசாரிக்கப்பட்டன. அந்த ஸங்கத்தை ஆச்ரயித்து நடைபெற்ற வேறு ஸங்கங்களுள் ஒன்று, நமது ஆசார வ்யவஹாரங்களைப் பற்றி விஷய விசாரம் செய்து அநேக நிர்ணயங்களையும் பஹு முகமாகத் தீர்மானித் திருக்கின்றது. அவைகளைப் பற்றி மாத்ரம் இவ்விடத்தில் ஸ்வல்ப ப்ரஸ்தாவம் செய்ய ப்ரவ்ருத்திக்கின்றோம்.

ஆசாரச் சீர்திருத்தச் சங்கமும் வைதிகர்களும்.

அநேக வர்ஷகாலமாய், இக்காலத்திய நாகரிகம் பெற்றிருக்கும் பல நிரூபகர்கள், நமது தர்ம சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டுள்ள ஆசாரங்களில் அத்ருப்தர்களாய், அவைகளைக் காலதேசாநுகுணமாக மாற்றுவதற்குப் பெரிய ப்ரயத்நங்களைச் செய்து வருகிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்த ப்ரவ்ருத்தியில் முதல் முதலில் ப்ரவேசித்த சில நிரூபகர்களை நாம் அறிவோம். அவர்களுடைய பாஹ்யாநுஷ்டாநங்கள் சாஸ்த்ர விருத்தங்களாகவும் அந்தக் காரணத்தால் நமக்கு மிகவும் அருசி ஜநகங்களாகவும் இருந்தபோதிலும், அவர்களுடைய ஆந்தரமான மநோபாவத்தில் எவ்வித கெட்ட எண்ணமும் காணப்படாமல் இருந்தது என்றே சொல்லவேண்டும். சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டுச் சிற்சில நியமங்களை அநுஷ்டித்து வரும் பொழுதெல்லாம் நாம் நம்மை வீணில் வருத்திக் கொள்ளுகிறோமென்றும், அந்தச் சாஸ்த்ர விதிகளுக்குப் பயந்து நாம் மற்றவர்களுக்குச் சிற்சில நியமங்களை நியமிக்கும் பொழுதெல்லாம் நிஷ்கருணர்களாக மற்றவர்களை வீணில் ஹிம்ஸிக்கிறோமென்றும் அவர்கள் ஹார்த்தமாகவே எண்ணி இருந்தார்கள். அவர்களுடைய ப்ரவ்ருத்தி முழுவதும் ப்ரஜைகளிடத்தில் அவர்கள் கொண்டிருந்த ப்ரீதியையும் பரிதாபத்தையுமே காரணமாக உடைத்தாயிருந்தது. ஆனால், அவர்களுடைய உபதேசம் ஒருவித ஸ்வச்சந்த ஸஞ்சாரத்திற்கு இடம் கொடுத்து வந்தபடியால், ஸ்வபாவத்தால் நிர்ப்பந்தங்களை வெறுக்கும் சீலமுள்ள அநேக ஸாமாந்ய ஜநங்கள், அவர்கள் கொண்டிருந்த சித்த சுத்தியின்றிக்கே, கேவலம் தமது ஸ்வாச்சந்த்யத்தை மாத்ரம் அடைய நோக்கமுள்ளவர்களாய் அவர்களுடைய கோஷ்டியைக் காலக்ரமேண சேரும்படி ஸம்பவித்தது. காலத்தின் கொடுமையினால் வைதிக தர்மங்களில் ஒருவித த்வேஷம் கொண்டிருந்த அநேக அவைதிகர்களும், இந்த கோஷ்டியைச் சேர்வதால் தமது த்வேஷத்திற்கு ஒருவித பரீவாஹம் கிடைக்கின்றதென்று எண்ணி அவர்களுடன் சேர்ந்தார்கள். பாச்சாத்ய ஸம்ஸர்க்கத்தால் சிற்சில புதிய மநோபாவங்களைப் பெற்றுள்ள நமது ஸ்த்ரீகளுள் சிலரும், தங்கள் தங்கள் மநோரத பூர்த்தியை உத்தேசித்து இப்பொழுது அந்தக் கோஷ்டியில் ப்ரவேசித்திருப்பதை நாம் பார்க்கிறோம். இவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து பெரியதொரு ஸமாஜத்தை



ஏற்படுத்திக்கொண்டு அடிக்கடி பற்பல விடங்களில் கூட்டங்கள் கூட்டி நிர்ணயங்களைச் செய்துகொண்டும் மஹா ஜநங்களுக்குத் தாம் உசிதமென்று நினைக்கும் மார்க்கத்தை உபதேசம் செய்துகொண்டும் வருகிறார்கள்.

சென்ற மார்கழி மாஸத்தில் அவர்கள் சேர்த்த கூட்டமானது அவர்களுடைய வார்ஷிக மஹாஸங்கங்களுள் ஒன்று. அதில் ஸந்நிஹிதர்களாக இருந்த ஸாமாஜிகர்களெல்லாரும் ஏகமுகமாக நமது ஆசாரத்தைப் பலமாகக் கண்டித்திருக்கிறார்கள். நமது பாலர்களுக்கும் பாலைகளுக்கும் விவாஹார்ஹ வயஸ் வரும் முன்னமேயே நாம் விவாஹத்தைச் செய்வித்து வருகிறோமென்றும், பால்யத்திலேயே வைதவ்யத்தை அடைந்து அதனால் பெரிய கஷ்டங்களுக்குப் பாத்ரமாகி க்லேசப்பட்டுக் கொண்டிருக்கும் ஸ்த்ரீகள் விஷயத்தில் நாம் நிஷ்கருணர்களாய் அவர்களுடைய கஷ்டங்களை இன்னும் துஸ்ஸஹங்களாகச் செய்யக்கூடிய பல ஆசாரங்களையும் தர்மங்களையும் விதித்து வருகிறோமென்றும், விவாஹ விஷயங்களில் சுல்கம் வாங்குவதையே பெரிதாக நினைத்து நாம் நமது குழந்தைகளுக்கு அநுரூபமில்லாத தாம்பத்யங்களை ஏற்படுத்தி வருகிறோமென்றும், நமது ஸ்த்ரீகளுக்கு வித்யாப்யாஸ காலத்தில் வித்யாப்யாஸத்தைச் செய்து வைக்காமல் கேவலம் க்ருஹ க்ருத்யங்களுக்கு மாத்ரம் உபயோகப்படும்படி அவர்களை வளர்த்து வருகிறோமென்றும், ஸ்த்ரீகள் மஹாஜநங்களுடைய முன்னிலையில் வாராமல் க்ருஹத்திற்கு உள்ளே இருந்து வரவேண்டுமென்று நாம் அநுசிதமான ஒரு கட்டுப்பாட்டைச் செய்கிறோமென்றும், தேவாலயங்களில் தேவதாஸிகளென்று சில ஸ்த்ரீகளை அப்யுபகமம் செய்து அவர்களுக்கு எவ்வித நியமமுமின்றிக்கே ஸ்வச்சந்த வ்ருத்தியை அநுமதித்து அவர்களைப் பகவானுடைய அநுக்ரஹ பாத்ரமாகும் ஜாதியென்று கொண்டாடிவருவதால் நாம் துர்மார்க்கத்திற்கு ஒருவாறு இடம் கொடுக்கிறோமென்றும், சண்டாளர் முதலானவர்களை அந்த்ய ஜாதீயரென்று அவர்களை நம்மிடம் அணுக வொட்டாமலும் நமது வீதிகளில் வர வொட்டாமலும் தேவாலயங்களுக்குள் ப்ரவேசிக்க வொட்டாமலும் நாம் அவர்களைப் பலவிதத்தில் ஹிம்ஸித்து வருகிறோமென்றும்; இத்யாதியான பல தூஷணங்களை நம்மீது அவர்கள் ஆரோபித்து இந்த ஆசாரங்களெல்லாவற்றையும் மாற்றுவதற்குத் தகுந்த உபாயங்களைத் தேட முயல வேண்டு

மென்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஸ்வாநுஷ்டானத்தாலும் பரோபதேசத்தாலும் தாங்கள் இவற்றை ஸாதித்துக்கொள்வதற்கு ப்ரயத்னம் செய்வதுடன் ராஜாங்கத்தாரைக் கொண்டு இந்த ஆசாரங்களைத் தடுப்பதற்குத் தகுந்த சட்டங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதும் அவர்களுடைய நிர்ணயம்.

இவர்களுக்கு நாம் சொல்லும் ப்ரதி வசனம் என்னவென்றால் :—கீழ்க் கூறப்பட்டுள்ள தோஷங்களுள் சில, உண்மையான தோஷங்களே. அவைகளுக்குச் சாஸ்த்ர ஆதாரம் என்பதே இல்லை. ப்ரத்யுத அவைகளுள் சிலவற்றைச் சாஸ்த்ரங்கள் பலமாக நிஷேதித்திருக்கின்றன. அப்படிப்பட்ட சாஸ்த்ர நிஷேதம் அந்த அநுஷ்டானங்களுக்கு இருக்கையிலும், வைதிகரென்று பெயர் பூண்டிருக்கும் சிலர், அஜ்ஞானம் முதலிய சில காரணங்களால், அவைகளை ஸதாசாரமென்று அநுஷ்டித்து வரும்படி ஸம்பவித்து விட்டது. சாஸ்த்ர விசாரமும் ஜ்ஞானப் பயிற்சியும் வ்ருத்தியானால், அவை ஸ்வயமாகவே நிவ்ருத்தமாகி விடுமென்பதில் ஆக்ஷேபமில்லை. அவைகளின் நிவ்ருத்திக்கு, சாஸ்த்ரத்தை அப்யஸித்து ஸத்ஸங்கத்தால் தைவ பக்தியையும் ஸர்வபூத ஸௌஹார்த்தத்தையும் ஸம்பாதித்திருக்கும் வைதிக வித்வான்களுடைய முயற்சி அபேக்ஷிதமே தவிர, இம்மாதிரி சாஸ்த்ர விச்வாஸமில்லாத கூட்டத்தாரின் முயற்சி அபேக்ஷிதமே இல்லை. தோஷங்களென்று கீழ்க் கூறப்பட்டவைகளுள் மற்றும் சில ஒரு விதத்திலும் தோஷங்களல்ல. யுக்தி யுக்தமான நிரூபணம் இல்லாததாலும் ஜன்மாந்தர துர்வாஸநா பலத்தாலும் அவைகளைத் தோஷங்களென்று இவர்கள் க்ரஹித்திருக்கிறார்கள் என்றே நாம் சொல்வோம். அவைகள் ஸம்பந்தப்பட்ட வரையில் நம்முடைய ஸ்திதி பின்வருமாறு இருக்கின்றது. வைதிகர்களான நாம் த்ருஷ்ட விஷயங்களை மாத்ரம் நம்புகிறவரல்லர். நமது இந்த்ரியங்களுக்கு அகோசரமாக அத்ருஷ்டமென்று ஒன்று இருக்கின்றது என்று நாங்கள் த்ருடமாக நம்பி இருக்கிறோம். அந்த அத்ருஷ்ட விஷயமான ச்ரேயஸ்ஸைத் தெரிந்துகொண்டு அதைத் தேட முயல்வதே நமது முக்ய தர்மமென்றும் நாங்கள் எண்ணியிருக்கிறோம். அப்படிப்பட்ட அதீந்த்ரியங்களான விஷயங்களை நமது மஹர்ஷிகள் யோகமஹிமையாலும் பகவதநுக்ரஹத்தாலும் ஸாக்ஷாத்கரித்து அவைகளைச் சாஸ்த்ர ரூபமாக வெளியிட்டிருக்கிறார்களென்று நாங்கள் நம்பியிருக்கிறபடியால், அவர்களால் காண்பிக்கப்பட்டுள்ள மார்க்கத்தை விட்டு விலகி நடப்பது என்பது எங்க



ளால் ஸாத்யமில்லாத விஷயம். நமது ஜ்ஞானமும் சக்தியும் அதிமாத்ரம் பரிமிதங்களே. த்ருஷ்ட விஷய குண தோஷ விசாரம் செய்வதற்கே அவைகள் போதாதவை; அப்படி இருக்கையில் அத்ருஷ்ட விஷய விசாரத்திற்கும் அவைகளின் நிர்ணயத்திற்கும் அவை எவ்விதத்தில் பர்யாப்தங்களாகும்? ஆகையால் அவ்விஷயங்களில் ஆப்தர்களுடைய வாக்யமே நமக்கு சரணம். அப்படி அந்த வாக்ய ப்ரகாரம் அநுஷ்டானங்களைச் செய்து வருவதால் நமக்குக் கஷ்டங்கள் விளையும் பக்ஷத்தில், அந்தக்கஷ்டங்களெல்லாவற்றையும் அநர்க்கங்களான ச்ரேயஸ்ஸென்றே நாங்கள் நினைத்து அதனால் ஆநந்தத்தையே அடைவோம். இதுதான் வைதிகர்களுடைய ஸ்திதி, மஹாஜனங்களுடைய பலத்தைக் கொண்டாவது ராஜாங்கத்தாருடைய ஸஹாயத்தைக் கொண்டாவது யாராவது இந்த ஸ்திதியை அழிய மாற்ற ப்ரயத்னப்பட்டால், அந்த ப்ரயத்னம் வ்யர்த்தமாகப் பரிணமிப்பதுடன், அவர்கள் மஹத்தான பகவந் நிக்ரஹத்திற்கும் பாத்ரமாவார்கள் என்றே நாம உறுதியாகச் சொல்வோம்.

* * *

**ஹிந்து மத விவாஹச் சீர்திருத்தம்.**

டாக்டர் முத்து லக்ஷ்மி ரெட்டி என்பவரால் சென்னைச் சட்ட நிர்மாண ஸபையாருடைய ஆலோசனைக்காக விஜ்ஞாபிக்கப்பட்டுள்ள விவாஹச் சீர்திருத்த தீர்மானத்தைப் பற்றிச் சென்ற ஸஞ்சிகையில் நாம் ப்ரஸ்தாவித்திருந்தோம். அந்தத் தீர்மானத்தின் அநேக அம்சங்களுள், 'கந்யகைகளுக்குப் பதினாறு வயஸ்ஸு பூர்த்தி அடைவதற்கு முன்னதாக விவாஹம் செய்யக்கூடாது' என்னும் அம்சமே பலமான ஆக்ஷேபத்திற்கு அர்ஹமாக இருக்கின்றது என்பது நம்முடைய அபிப்ராயம். 'விவாஹம்' என்னும் சப்தத்தால் நாம் எவ்விதமான க்ரியையை அர்த்தம் கொள்ளுகிறோம் என்பதைச் சரிவரத் தெரிந்துகொள்ளாமலே அந்த அம்மாள் இந்தத் தீர்மானத்தை விஜ்ஞாபனம் செய்து கொண்டிருக்கிறார்களாகையால், அது சட்ட ஸபையாரால் ஆலோசிக்கப்படத் தகுந்ததன்று என்பது நம்முடைய ஆக்ஷேபம். இந்தத் தீர்மானத்தை ஆமோதிக்கும் நமது ஸஹ்ருத்துக்களுள் சிலர், பால்யத்திலேயே விவாஹம் செய்வதால் வைத

ஷ்ய ப்ராப்திக்கு அதிகமான இடம் உண்டாகின்றதென்றும், கொஞ்சம் காலம் க்ரமித்து விவாஹம் செய்தால் வைதவ்யத்தின் ஸம்பாவனைக்கு அவ்வளவு அவகாசம் இல்லையென்றும் ஒரு யுக்தியைச் சொல்லி, அந்தத் தீர்மானத்தை நாம் ஆக்ஷேபிக்கக் கூடாதென்று வாதிக்கிறார்கள். வைதவ்யம் என்பது மஹத்தான கஷ்டமே. அதைத் தடுப்பதற்கு ஏதாவது ஒரு சாஸ்த்ரீயமான உபாயம் இருக்கும் பக்ஷத்தில் அதைப் பெருத்த நிர்வ்ருதியுடன் நாமும் கைக்கொள்வோம் என்பதில் ஆக்ஷேபம் இல்லை. இப்பொழுது இவர்கள் காண்பிக்கும் உபாயம் அசாஸ்த்ரீயம்; அது வைதவ்யத்தை நேரவொட்டாமலே தடுத்து விடுகின்றது என்று சொல்வதும் ஸாத்யமில்லை. அதன் ஸம்பாவனையைக் கொஞ்சம் குறைக்கின்றது என்று மாத்ரம் சொல்லலாம். அந்தப் பலத்தைப் பெரிதாக நினைத்து நாம் நமக்கு அதிமாத்ரம் ஆப்தர்களாயுள்ள மஹர்ஷிகளின் வாக்யத்திற்கு விருத்தமாக நடக்க ப்ரயத்னப்படுவது புத்தியத் க்ருத்யமாகுமோ? நம்முடைய முயற்சிகளால் தடுக்கக்கூடாத கணக்கற்ற கஷ்டங்கள் நமக்கு ப்ரதி தினம் ஸம்பவிக்கின்றனவே! அவைகளுக்கு நாம் என்ன ப்ரதீகாரத்தைச் செய்கின்றோம்? அவைகள் போலவே இந்தக் கஷ்டமும் கர்மானுகுணமாக நேர்கின்றதாகையால், இவைகள் எல்லாம் ஆகமாபாயிகளென்றும் அநித்யங்களென்றும் தெரிந்துகொண்டு இவைகளை நாம் பொறுத்துப் போக வேண்டுமென்றே நாம் சொல்வோம்.

“ ஊத்தூ-வெ-ஸூஜீஉதாவொஹெ்யா யாவ ஜூ-ஜு ஜெஒாஷயழ ”

(புத்திமான்கள் தமது புத்தி பலத்தைக்கொண்டு ஆபத்துக்களை வரவொட்டாமல் தடுக்க வேண்டும்) என்பது உண்மையே. ஆனால், அந்த முயற்சி ஒரு எல்லைக்கு உட்பட்டதன்றோ? பகவானால் மஹர்ஷி முகமாக விதிக்கப்பட்டுள்ள விவாஹ நியமங்கள், அவனால் விதிக்கப்பட்டுள்ள ஸத்ய வசநாதிகள் போலவே நம்மால் எப்பொழுதும் அநதிக்ரமணீயங்கள். இஷ்ட ப்ராப்தியையோ அநிஷ்ட நிவ்ருத்தியையோ உத்தேசித்து நாம் அந்த விதிகளை அதிக்ரமிக்க ஒருபொழுதும் துணியக்கூடாது என்பது தான் நமது கொள்கை.

---



ஸாஊாத் உயிதெெவதம் தாபணஅஂஅம—ஸர்வ ஸாதாரணமான திருவடிகளை; இத்தால் ஸம்பந்த ஸாமாந்யத்தைச் சொல்லுகிறதன்று; ஆச்ரணீயத்வே ஸமமா யிருக்கிறபடியைச் சொல்லுகிறது. இப்படி விசேஷிக்கிறது எத்தாலே யென்னில், விமுகரான காலத்தில் ஆச்ரித விரோதிகளென்றிட்டு அழியச்செய்யுமவனுகையாலே “அவுணர்க்கென்றும் சலம் புரிந்தங்கருளில்லாத் தன்மையாளன்” என்னக் கடவதிறே. நிஹீந ஜந்ம குண வ்ருத்தரோடு இவற்றால் உத்க்ருஷ்டரோடு வாசியற எல்லார்க்கும் ஆதித்யோதயம் போலே எனக்கென்று பற்றலாம்படியான திருவடிகளென்கை.

ராவணன் எச்சிலைத் தின்றுவந்த ஸ்ரீ விபீஷணாழ்வான், “ ஸவ-ஜொக ஶரணஞாய ” என்று வழக்குப் பேசிப் பற்றலாம் படியிறே இருப்பது. “ ஸெொஷம

---

தெவாநாம தெெவதழ—‘மனிசற்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவாவோ’ என்றும், ‘தம்தெெவதாநாம வரமஂசதெெவதம’ என்கிறபடியே தேவர்கள் திருமுடிக்குத் திருவாபரணமாயன்றோ நின் திருவடி துலங்குவதென்றபடி. இதனால், நினைந்து நைந்துள் கரைந்துருகி புனைந்த கண்ணிநீர் சாந்தம் புகையோடேந்தி வணங்கும் வானவர்களன்றோ அவனை ஆச்ரயிக்கக் தகுவது, நிறைவொன்றுமில்லாத நீசனை நம்மால் அவனை ஆச்ரயிக்கக் தகுமோவென்று அஞ்சி அகல வேண்டாவென்றபடி. அன்றிக்கே, ‘தெவ’ சப்தம் காந்திவாசியான ‘திவ்’ தாதுவிலே நிஷ்பந்நமாய் ‘விஷ்ணுஹக்தி வஶொதெவ:’ என்கிறபடியே பகவத் பக்தியினால் ப்ரகாசிக்குமவர்களான ப்ரஹ்லாத நாரதாதிகளன்றோ அவனை ஆச்ரயிக்க அடுப்பதென்று அஞ்சவேண்டாவென்று சொல்கிறதாகவுமாம். அன்றிக்கே, ‘தெவா: ஹமவஷாஜ்ஞாநவ்ருத்தஶீலா:’ என்கிற பாஷ்யத்தின்படியே ‘திவி’ தாது ‘கதி’ என்னும் அர்த்த முடையதாய் ‘மத்யஶ-ஜா: ஶாஜ்யஶ-ஜா:’ என்று இங்கு ‘தெவ’ சப்தம் ஜ்ஞாநாதிகரென்று ப்ரஸித்தி பெற்ற பீஷ்மாதிகளைச் சொல்லுகிறதாய், அறிவிலிகளான பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கமுமுடைய நம்மால் ஆச்ரயிக்க முடியுமோ வென்று சங்கிக்க வேண்டா வென்கிறதாகவுமாம். ஆக, ஜந்மத்தினாலும் பக்தியினாலும் ஜ்ஞாநாநுஷ்டாநாதிகளாலும் மேன்மை பொருந்தினவர்களுக்கும் என்றபடி; இது மற்றும் ஐச்வர்யாதிகளுக்கு முபலக்ஷணம்.

தாநவாநாஂஅ—‘தநு வயிற்றில் பிறந்த ராவணன்’ என்னுமாப்போலே பொல்லாங்கினால் ப்ரஸித்தி பெற்றவர்களுக்கும். ஸர்வேச்வரனென்றால் தேவபக்ஷபாதி என்று சிலர் சொல்வது ப்ரஹ்லாத பக்ஷபாதியான உன் ஸ்வபாவ மறியாதார் சொல்லும் பொய் வார்த்தை என்றபடி. அன்றிக்கே, ‘தெவ’ சப்தத்திற்கு எதிரிடையாய் நிற்கிற ‘தாநவ’ சப்தம் ‘விபரீதஸ்வஹாவாஸுரா:’ என்கிறபடியே பகவதாஜ்ஞாதி வ்ருத்திசீலர்களாய், கேட்பார் செவி சுடு கீழ்மை வசவுகளே வைய்யும் சிசுபாலாதிகளுக்கு மென்றபடி. தாராபஹாரம் பண்ணியிருக்கச் செய்தேயும் ராவணனையும் ரக்ஷித்தோமாக வில்லையே

ஸர்வஹேதவே '' என்றிறே சரண்யன் வார்த்தை. " வ்யவஸாயேஷு ஸர்வ ஷாணாம் ஸ்வரூபம் ஸவதி ஊர்ஜிதம் '' என்று ஆச்ரயண போக்யமான மநுஷ்ய ஸாமாந்யத்திலே க்ருபை மிக்கிறே இருப்பது. பரதக்ஷாஸ்ஹிஷ்ணுத்வமிறே க்ருபையாவது. ஆச்ரயண வேளையிலே " யதி வா ராவண: ஸ்வயம் '' என்றானிறே. "எல்லா உலகும் தொழுமாதி மூர்த்தி '' என்றும் " பொது நின்ற பொன்னங்கழல் '' என்றுமிறே அபியுக்தர் வார்த்தை.

ஸர்வதா—ப்ராதிகூல்யம் பண்ணுகிற வேளையே யானாலும் ரக்ஷாபேக்ஷையே வேண்டுவதாக விஷயீகரிக்கும் திருவடிகள் " பாபாநாம் வா.....கார்யம் கருணமார்யேண '' என்னக் கடவதிறே. " நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதன் '' என்று ஆழ்

என்கிற வெஞ்சாறனன்றே 'யதிவாராவண: ஸ்வயம்' என்று இவன் விபீஷணவேஷம் பூண்ட ராவணனாலும் 'அவச்யம் அழைத்துவா' யென்றருளிச் செய்யவேண்டியிருந்தது. 'ஸகிதிஷ்ட ஸர்வலோகாநாம் ஸஜதே ஸம்ஸ்ருதாஹக:। ஸர்வேஷாம் ஸர்வஸ்வஸ்ஸ்வஸ்திதோஸ்மிஸ:' என்று நூராசார முள்ளவனானாலும் ஸர்வேச்வரனை ஆச்ரயித்தால் அவனை நெகிழ நினைக்க லாகாதென்றும், அவனைப் புண்ய சீலர்களான பக்தர்களோடு ஸமமாகப் பூஜிக்கவேணு மென்றிறே விதித்திருப்பது. 'அ' என்கிறதால் ஆநுகூல்யமும் ப்ராதிகூல்யமு மின்றிக்கே உதாஸீநர்களான மற்றவர்களுக்கு மென்றபடி.

ஸாமாந்யம்—இங்கு ப்ரஹ்மா தொடங்கி ஸ்தம்ப பர்யந்தமாக வஸ்துக்கள் ஈச்வரனுடைய உடைமை என்னுமதில் ஸமானமாக இருக்குமாப்போலே, சிறியது பெரியது என்கிற எல்லா வஸ்துக்களுக்கும் அவன் ஈச்வரனாக இருப்பது ஸமானமென்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறதன்று. இவ்வர்த்தத்தை இங்குச் சொல்வதனால் பயனில்லையிறே. மற்று யேதென்னில், 'அவுணர்க் கென்றும் சலம்புரிந்தங் கருளில்லாத் தன்மையாளன்' என்கிறபடியே ஆச்ரித விரோதிகளை அழியச்செய்யுமவனாகையினாலே குணவ்ருத்தத்தினால் தாழ்ந்தவனோடு உயர்ந்தவனோடு வாசியற, தாபத்தி லகப்பட்டார் எல்லாரும் தண்ணீர்த்துறையில் இறங்குமாப்போலே எனக்கு எனக்கென்று ஆச்ரயிக்கலாம்படியான திருவடிகள் என்றபடி. 'எல்லா வுலகும் தொழுமாதிமூர்த்தி' என்றும் 'பொதுநின்ற பொன்னங்கழல்' என்றுமிறே பூர்வர்களின் பாசுரம்.

இப்படி யெல்லாரும் ஸமமாக ஆச்ரயிக்கலாம் படியான வேறு தேவதையைக் கண்டதுண்டோ என்னில்; 'ஸுபிதைவதம்' என்கிறது, இங்கு 'ஸுபி' சப்தம் உத்கர்ஷ வாசியாய் உத்க்ருஷ்ட தைவதமென்றபடி. இதனால், ப்ருஹ்ம ருத்ராதி தேவதைகள் சிலர்க்கு ஆச்ரயிக்கலாம் படியும், சிலருக்குக் கிட்ட அரியர்களா யிருந்தாலும், இது புருஷோத்தமனுடைய திருவடிகளாகையினாலே ப்ருஹ்மா முதல் புல்லெறும்பாதிகளுக்கும் பொதுவாக இருக்கக் குறையில்லை என்று கருத்து.



வாரு மருளிச் செய்ததுக்கும் அடி இதுவிறே. "ஸநாதனோதித விசேஷாதசேஷ லோகசரண்ய '' என்றதுக்கும் முதல் இதுவிறே.

அநந்யம்—அந்யோந்யம் சேர்த்தி யழகைச் சொல்லுகிறது. உபாயமாக அநுஸந்திக்கு மளவிலே வேறொரு ப்ரயோஜநம் வேண்டா. ப்ரயோஜநமும் இதுவே போருமென் றிருக்கை.

சரணம் ப்ரபத்யே—உபாயமாக அடைகின்றேன். கீழ்ச் சொன்ன ஸர்வாதிகாரத்வம் ஸித்தோபாயத்தைக் குறித்து என்கை; ஸாதநாந்தரங்கள் அதிக்ருதாதிகாரங்க ளாயிறே இருப்பது. "ப்ரஜ மதா" என்கிற கத்யர்த்தம் புத்யர்த்தமாய் அத்யவஸிக்கிறே னென்றபடி. இத்தால் சரண்யன் ஸந்நிதி வேண்டா; ப்ராப்தியே அமையுமென்கை. ஆசார்ய ருசி பரிக்ருஹீதமான வாக்யத்தில் க்ரியாபதத்

ஸர்வதா—'பழுதே பல பகலும் போயின' வென்றிருக்கும் நாம், நினைத்த பொழுதெல்லாம் என்றபடி. 'வஸந்தே ஜ்யோதிஷா யஜேத' என்னுமாப் போல கஷ்டஸாத்யமாக இருந்து சில்வானங்களான பலங்களைத் தரும் உபாயங்களுக்கன்றே காலவிசேஷ நியமமுள்ளது. ஸக்ருத் கர்த்தவ்யமாய் ஸுகரமாயு மிருந்து பரம பல ப்ரதமான இவ்வுபாய விசேஷத்தை இக்காலத்தில் செய்யலாம், இக்காலத்தில் செய்யலாகா தென்கிற நிர்ப்பந்த மில்லையென்று சொன்னதாயிற்று.

அன்றிக்கே, ஸர்வதா—ஸர்வகாலத்திலும்; நாம் ஈச்வரனுக்கு அநுகூலனாக இருக்கும் காலத்திற் போல ப்ரதிகூலனாக இருக்கும் காலத்திலும் கூடக் கிட்டி ஆச்ரயிக்கக் குறையில்லை என்கிறபடி. "யதிவாராவண ஸ்வயம்" என்கிறபடியே நம்மைச் சரணமென்றடைந்த இவன் ராவணனாகவே யிருந்து நமது மநோரதம் ஸித்திக்குமோ என்றிறே ஸ்ரீசரண்யனுடைய அபிப்ராய மிருப்பது.

அன்றிக்கே, ஸர்வதா—ஸர்வ ஜந்ம காலங்களிலு மென்றபடி. நின் சரணே சரணென்றிருக்கப் பெற்றால், சண்டாள ஜந்மாவாய்ப் பிறந்தாலும் அது ச்லாக்யமென்றபடி. அஃதில்லையாகில், புண்ணியத்தின் பயனான பூஸுர ஜந்மாவையும் புல்லியதென்றே நினைக்க விருக்குமென்றாய்த்து. இதனால் 'விப்ராதத்விஷட்குணயுதா தரவிந்தநாப பாதாரவிந்த விமுகாத் ச்வபசம் வரிஷ்டம்—மந்யே' என்கிற ப்ரஹ்லாதாழ்வானுடைய வாக்யம் வ்யாக்யாதமாயிற்று.

அன்றிக்கே, ஸர்வதா—எல்லாக் காலத்திலும் அதாவது தாயமே தருதுன்ப வின்ப வினைகளையே நீ தந்திடும் காலத்திலும், அரிசினத்தா லீன்றதாயகற்றிடினும் தன் அருள் நினைந்தேயழும் குழவிபோல், நின்சரணல்லால் சரணில்லை என்றிருப்பன் அடியே னென்றபடி.

தில் வர்த்தமான நிர்த்தேசத்துக்கும் அடி "வ்ரஜாமி" என்கிற வர்த்தமான நிர்த்தேசமே. அதே கௌணமாக உபதேசித்துப் போருகிறதும் அதனுடைய "ஸக்ருதேவ ப்ரபந்நாய" என்கிற வாக்யத்தைப் பற்ற, ஆக ஸக்ருத் விதானம் ஈச்வர விஷயீகாரத்தைப் பற்ற; ப்ராப்ய ருசியாலே ப்ராப்தியளவும் செல்ல அநுவர்த்திக்க கடவது ராகத்தாலே.

வ்ரஜாமி — ப்ரஹ்வீகாரம், தேவதா ப்ரதிபத்தி ப்ரஹ்வீபாவ ரூபமான யாகமுமன்றிக்கே, தத்அங்கமான ப்ரயாஜாதிகளுமன்றிக்கே யிருக்கிறாப்போலே, உபாய ஸ்வீகாரமும் உபாயமன்று அதுக்கு; அங்கமுமன்றிக்கே அதிகாரி விசேஷணமாய்க் கிடக்கிறது.

---

அன்றிக்கே, 'சரணம் தவ சரணத்வந்த்வம் ஸர்வதா வ்ரஜாமி' என்று அந்வயமாய் 'இங்குமங்கும் திருமாலன்றி இன்மை கண்டு' என்கிறபடியே உபாயதசையிற் போலே ப்ராப்ய தசையிலும், தாவி வையம் கொண்ட நின் தடந்தாமரை யடிகள் என் சென்னிக் கணியாகச் சேர்வதெந்நாளோ வென்று ப்ராப்ய பரமாகவும் சிலர் யோஜிப்பார்கள்.

தவ சரணத்வந்த்வம் — உம்முடைய இரண்டு திருவடிகளையு மென்றபடி; இங்கு தாஸனானவன் ஔசித்யாதிசயத்தினால் இறியும் துறையைச் சொல்லுகிற சரண சப்தம் நித்ய ஸித்தமாய் சுபாச்ரயமான திவ்ய மங்கள விக்ரஹத்துக்கும் உபலக்ஷணம். வடிவிணையில்லா மலர்மகள் மற்றும் நிலமகள் பிடிக்கும் மெல்லடியைக் கொடுவினையேனும் யானும் ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கப் பெற்றேன் என்ற தாய்த்து. இங்கு ஸஞ்சரண வாசியான சரண சப்தத்தினால் உலகத்தில் அதிசயமுடைய ரக்ஷகனிருக்குமிடம் தேடித் திரியும் ரக்ஷ்ய வஸ்துவைப் போலன்றிக்கே 'வந்தருளி யென்னெஞ்சிடம் கொண்ட வானவர் கொழுந்து' என்கிறபடியே ரக்ஷ்ய வஸ்து விருக்குமிடம் தேடி வந்து மணிசர்க்காப்படாதது படும் ரக்ஷகனுடைய க்ருபாதிசயம் தோற்றுகிறது.

மற்றும் அவயவாந்தரங்களை எடாதே திருவடியை அருளிச் செய்ததால் 'அதிஸ்ப்ருஹணீயம் ஹி சரண ம்ருதுத்வம்' என்கிறபடியே இதின் க்ருபோத்தம்பகத்வாதிசயமும், 'தவாம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே நிவேசிதாத்மா கதமந்யதிச்சதி' என்கிறபடியே இத்திருவடிகளின் போக்யத்வாதிசயமும் ஸூசிப்பிக்கப் படுகிறது.

த்வந்த்வம் — என்கிற இச்சப்தத்தினால் ஒரு திருவடியின் வடிவழகுக்கு மற்றொரு திருவடியே ஸத்ருசமாயிருக்கும்படியும், 'கட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதம் கை ஒவ்வா' என்கிறபடியே மற்றொரு த்ருஷ்டாந்த தரித்ரமாயிருக்கும் தன்மையும் தோன்றுகிறது.

அன்றிக்கே, த்வந்த்வ — கிணற்றில் விழுந்த குழந்தையை இருகையாலெடுத்து விடுவாரைப்போலே இப்ரக்ருதியாகிற பாழுங் கிணற்றில் விழுந்த யான் கரைசேரும் கருணையாலன்றோ இரண்டு திருவடிகளையும் அடியேன் ஆச்ரயிக்கும்படி காட்டியருளினது



தவ — "ஸ்வஸுஹம் ஜீவிதம் ராஜ்யம்" என்றும், "கபோதோ வாநரச்ரேஷ்ட கிம் புநர் மத்விதோ ஜந:" என்றும், தன்னை அழியமாறிச் சரணாகத பரித்ராணம் பண்ணின கபோதோபாக்யானமும் அருளிச்செய்த தேவருடைய "சரண த்வந்த்வம் வ்ரஜாமி" என்று அந்வயம்.

முதல் ச்லோகம் ப்ராப்ய ஸங்க்ரஹமானபோது, இந்த ச்லோகம் "நமஸ்தே" என்கிற பதத்துக்கு விவரணமாகிறது. விவரணமேதென்னில், "ஸர்வதா சரணத்வந்த்வம்" என்று நமச்சப்தம் ஸாதநாந்தரத்துக்கும் ஸாதாரணமாகையாலே சரணசப்த பர்யாயம் நமச் சப்தத்தினுடைய விவரணமாகிறது. "மாமேவைகம் ஶரணம் ஶரண்யம் வராபேக்ஷஹ" என்று விதித்த சரணாகதியினுடைய அநுஷ்டான வேளையிலே "ப்ராஞ்ஜலிர் ஸஹிதா ஸ்வேந ப்ரபந்நோ ஜகாம"

---

என்கிறான். இதனால் ரக்ஷ்ய வஸ்துவின் அளவைக்காட்டிலும் ரக்ஷகனுடைய பாரிப்பு விஞ்சியிருக்கிறபடி தோற்றுகிறது.

வ்ரஜாமி — என்கிற விடத்தில் கத்யர்த்தமான 'வ்ரஜ' தாது, 'கத்யர்த்தா புத்த்யர்த்தா:' என்கிறபடியே புத்தி விசேஷமான விச்வாஸத்தைச் சொல்லுகிறது. மேல் 'மி' ப்ரத்யயம் ஆச்ரயத்தைச் சொல்லுகிறது. ஆக 'விச்வஸிக்கிறேன்' என்று சொல்லியதாயிற்று. இங்கு, சரணசப்தம் த்வயாதி மந்த்ரங்களிற் போல உபாய வாசியாக இருக்கிறது. 'நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்' என்றும், 'சுழல்களவையோ சரணாகக்கொண்ட' என்றுமாப்போலே இங்கும் அவதாரணம் விவக்ஷிதம். ஆக இவற்றால் 'உன் திருவடிகளையே எனது ரக்ஷணோபாயமாக அத்யவஸிக்கிறேன்' என்று பலிதம்.

இந்த இரண்டாவது ச்லோகமானது, 'ஜிதந்தே' என்கிற ருக்வேத மந்த்ரத்தில் சொல்லப்பட்ட சரணாகதி ஸர்வாதிகார மென்பதைச் சொல்வதுடன் சரணாகதிக்கும் வ்யாப்யமாக இருப்பதால், 'ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத:' என்கிறபடியே சரணாகத்யங்கபூதங்களான ஆநுகூல்ய ஸங்கல்பாதி அங்கபஞ்சகங்களையும் 'ஸ்வாத்மானம் மயி நிக்ஷிபேத்' என்றும், 'ஆத்மாத்மீய பரந்யாஸோ ஹ்யாத்மநிக்ஷேப உச்யதே' என்னும் சொல்லுகிறபடியே ஸ்வரூப பர பல ஸமர்ப்பணங்களையும் இங்கு உசித ஸ்தலங்களில் அநுஸந்திக்க வேண்டியது உசிதமாகும்.

அவற்றுள், சரண சப்தத்தினால், உபாயத்வ ப்ரார்த்தநாந்தர்க்கதமான கோப்த்ருத்வ வரணமும், விச்வாஸ வாசியான வ்ரஜ தாதுவினால் ஸ்வரூப பல ஸமர்ப்பண விசிஷ்ட பர ஸமர்ப்பணமும், உத்தம புருஷனால் ஔசித்ய லப்தமான அதிகாரமும் கார்ப்பண்யமும், தாஸ ஸ்வபாவ ஸித்தமான ஆநுகூல்ய ஸங்கல்ப ப்ராதிகூல்ய வர்ஜநங்க

𑌏𑌕𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌸𑌂𑌹𑌾𑌰𑌕𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌅𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌶𑍍𑌚𑌾𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 𑌚 𑌗𑍁𑌣𑌮𑌾𑌯𑌾𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌃 ॥ 3.

---

[illegible]" என்று நமஸ்ஸைப் பண்ணினார்கள். ஆகையாலே ஸ்தோத்ர ப்ரமாணத்தாலே சரண சப்த பர்யாயம் நம: சப்தம்.

(3) 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯—ப்ரத்யக்ஷ ஸித்தமாயும் ஶ்ருதி ஸித்தமாயுமுள்ள ஸகல பதார்த்தங்களையும், 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾—ஸ்ருஷ்டித்தவன், 𑌏𑌕𑌃—ஸஹாயாந்தர நிரபேக்ஷன, 𑌤𑍍𑌵𑌂—நீ ஒருவனே, 𑌅𑌸𑌿—ஆகிறாய்; 𑌤𑌥𑌾—அப்படியே, 𑌸𑌂𑌹𑌾𑌰𑌕𑌃—ஸ்ருஷ்டிகளனைத்தையும் ஸம்ஹரிக்கிறவனும் நீ யொருவனே ஆகிறாய்; 𑌅𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃—ரக்ஷாபேக்ஷா ப்ரதீக்ஷகனும், 𑌅𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 𑌚—பந்தகமான கர்மங்களிலே ப்ரவர்த்தியா நின்றாலும் நிஷேதியாமல் அநுமதி ப்ரதானம் பண்ணுமவனும், 𑌗𑍁𑌣𑌮𑌾𑌯𑌾𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌃—ஸத்வ ரஜஸ் தமோ மயியான ப்ரக்ருதியாலே சேதநருக்கு ஸ்வஸ்வரூபத்தை உள்ளபடி அறிகைக்கு அஸாத்யனாகவும் இராநின்றாய்.

𑌏𑌕𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍀𑌤𑍍𑌯𑌾𑌦𑌿—கீழ் இரண்டு ச்லோகத்தாலே ப்ராப்ய ப்ராபகங்களைச் சொல்லிற்றாய், அந்த உபாய ஸ்வீகாரத்துக்கு அடியான சரண்யதையைச் சொல்லுகிறது மேலில் ச்லோகங்கள். அதில் இந்த ச்லோகத்தில், அநந்தரம் சரண்யதைக்கு உறுப்பாக அவனுடைய ஜகத் காரணத்வ ப்ரயுக்தமான ஸர்வஜ்ஞத்வாதி பஹுகுணங்களைச் சொல்லுகிறது.

---

னும் ப்ரமாணாந்தர பலத்தினாலே ஸமுசிப்பிக்கப் படுகின்றன. மற்றும் அவச்யாபேக்ஷிதமான புருஷகார ஸம்பந்நர்திகளையும் ஸர்வ நாமாவான யுஷ்மச் சப்தாதிகளில் யதாப்ரமாணம் அநுஸந்திக்க வேண்டியது.

ஆக இந்த இரண்டாவது ச்லோகத்தின் தாத்பர்யமாவது: அநுகூல ப்ரதிகூல விபாகமற, ஸர்வலோக சரண்யமான உன் திருவடிகளையே புகலொன்றில்லாத வடியேன் உபாயமாக அத்யவஸித்து ஆநுகூல்ய ஸங்கல்பாதி அங்க பஞ்சகங்களோடும் ஸ்வரூப பல ஸமர்ப்பணங்களோடும் கூடின ஆத்மரக்ஷா பர ஸமர்ப்பணத்தைப் பண்ணுகிறேன் என்பதாயிற்று.

இந்த 'ஜிதந்தே' ஸ்தோத்ரமானது சென்னை ஸ்ரீ நிகேதந முத்ராக்ஷர சாலையில் அச்சிடப்பட்ட ஸ்ரீ கோசங்களில், இருபது ச்லோகத்துடன் முடிவதாகக் காணப்பட்டாலும், ப்ராசீநமாக அச்சிடப்பட்ட ஸ்ரீ கோசங்களில் 14-வது ச்லோகத்தளவில் முடிந்து விட்டதாகக் காணப்படுவதாலும், ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை 14-ச்லோகத்திற்கே வ்யாக்யாநம் செய்து முடித்திருப்பதாலும், அந்த 14-வது ச்லோகத்திலும் '[illegible]' என்று ஸ்தோத்ரம் முடிந்ததாகச் சொல்லப்படுவதாலும், மேல் ஆறு ச்லோகங்களுக்குள் சில 3-4-வது ஜிதந்தேயிலும், சில, ஸ்ரீ விஷ்ணு புராணம் இதி



---

"𑌕𑌾𑌰𑌣𑌂 𑌤𑍁 𑌧𑍍𑌯𑍇𑌯𑌃" [அதர்வசிகா] என்கிறபடியே உபாஸ்யம் ஜகத் காரண வஸ்துவானவோபாதி சரண்யமும் ஜகத்காரண வஸ்துவேயிறே. அங்ஙனே யென்னில் '𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌯𑍋 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌹𑌿𑌣𑍋𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈" [ச்வே-6] என்று ஜகத்காரண வஸ்துவைச் சொல்லி, "𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌵𑍈 𑌶𑌰𑌣𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇" என்று மோக்ஷ ஸித்திக்காக அவன் திருவடிகளில் பண்ணும் ப்ரபத்தியை மோக்ஷோபாயமாக விதித்ததிறே.

𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌏𑌕𑌃 𑌅𑌸𑌿. 'லோக' சப்தத்தாலே, "𑌲𑍋𑌕𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌲𑍋𑌕𑌃" என்கிற வ்யுத்பத்தியால் ப்ரத்யக்ஷ ஸித்தமாயும் ச்ருதி ஸித்தமுமாயுள்ள ஸகல பதார்த்தங்களுக்கும் ஸ்ரஷ்டாவென்கை; "𑌤𑍍𑌵𑌂" என்கிற ஏக வசநத்தாலே ஸ்ரஷ்ட்ரந்தர வ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறது. "𑌆𑌕𑌾𑌶𑌾𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌃 𑌵𑌾𑌯𑍋𑌰𑌗𑍍𑌨𑌿𑌃 𑌅𑌗𑍍𑌨𑍇𑌰𑌾𑌪𑌃 𑌅𑌦𑍍𑌭𑍍𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀" (தை—ஆ.) என்று அசேதநங்களுக்கும் "𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌸𑍃𑌜𑌤𑌿" இத்யாதிகளிலே சேதநர்க்கும் ச்ருதி ஸ்ம்ருதிகளிலே கர்த்ருத்வம் சொல்லாநிற்க ஈச்வரனே ஸர்வ ஸ்ரஷ்டா என்னபடி என்னென்னில், சேதநாசேதந சரீரியானவன் ஸர்வ ஸ்ரஷ்டா வாகையால் ஸர்வ ஸ்ரஷ்டா ஈச்வரனே; "𑌸𑍍𑌵𑌾𑌤𑍍 𑌶𑌰𑍀𑌰𑌾𑌤𑍍 𑌸𑌿𑌸𑍃𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃" [மநு—1–8] என்று மநு; "𑌸 𑌏𑌵 𑌸𑍃𑌜𑍍𑌯𑌃 𑌸 𑌚 𑌸𑌰𑍍𑌗𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸 𑌏𑌵 𑌪𑌾𑌤𑍍𑌯𑌤𑍍𑌤𑌿 𑌚 𑌪𑌾𑌲𑍍𑌯𑌤𑍇 𑌚 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌭𑌿𑌰𑌶𑍇𑌷𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑍋

---

ஹாஸ ஸமுச்சயாதிகளிலும் காணப்படுவதாலும், முதல் ஜிதந்தே ஸ்தோத்ரமானது 14-வது ச்லோகத்துடன் முடிந்து போகிறதாகவே தோன்றுகிறது.

இந்த ஸ்தோத்ரம் முழுவதும், ருக்வேத மந்த்ரமான முதல் ச்லோகத்திற்கு வ்யாக்யாநமாக இருப்பதாகச் சிலரது அபிப்ராயம். சிலர் இதில் முதல் ச்லோகமான ருக்வேத மந்த்ரத்தையும், நிகமநத்தைச் சொல்லும் கடைசி ச்லோகத்தையும் விட்டு, நடுவிலுள்ள 12-ச்லோகங்களுக்குள் முன் பாகமான 6-ச்லோகங்கள், அகாரவாச்யனான ஸர்வேச்வரனுடைய ஸ்வபாவங்களையும், பின் பாகமான 6-ச்லோகங்கள் ஸாம்ஸாரிகபய சோகார்ணவ நிமக்நனாய் அகிஞ்சநராய் மகாரவாச்யனான சேதநருடைய ஸ்வபாவங்களையும் வ்யக்தமாகச் சொல்லுகையாலே ஸர்வவேத ஸாரமான ப்ரணவார்த்த விவரணம் போலிருக்கிறதென்பார்கள்.

இங்கு முதல் ச்லோகத்திற் சொன்ன சரணாகதிக்கு அவச்யாபேக்ஷிதங்களான சரண்யனுடைய குண விசேஷங்களை மேல் ஆறு ச்லோகங்கள் அகிஞ்சநனான சேதநன் அவன் திருவடிகளை ஆச்ரயித்து ஸாம்ஸாரிக பய துக்கங்களைப் போக்கி உஜ்ஜீவிக்கும் ப்ரகாரத்தைச் சொல்வதாலும், த்வயாதி மந்த்ரங்களில் பூர்வோத்தர பாகங்களிற்போல இந்தப் பூர்வோத்தர ஷட்கங்களிலும் ஸர்வேச்வரனுடைய உபாயோபேய பாவங்கள் சொல்லப்படுகின்றன வென்கை ப்ரகரணத்திற்கு அநுகுணமாகும்.

(3) இந்த முதல் ஷட்கத்தில் ஸர்வேச்வரனுடைய சரண்யதைக்கு அவச்யாபேக்ஷிதமான பரத்வத்தைச் சொல்ல ஆரம்பித்து, மேரு பர்வதமனது ஸ்வர்ண மயமாக

வபதொ வஸெணூ: '' [வி. புரா. 12–21] இதி வசாமஸ: ; '' தசஹியூா நா செவதா தயூிம,மாஷூ: [ப்ர. ஸ:ஹித். 2–3] இதி ஸூத்ரம்.

'ணக' பதத்தாலே ஸஹாயாந்தர நிரபேக்ஷதையைச் சொல்லுகிறது. ''ணகாகீ ந ரஜெத'' [மஹோப] என்று இழவு தன்னதானபடி சொல்லுகிறது. '' பஹூஸ்யாம ப்ரஜாயெய '' [தைத். ஆ.] என்று இவனுடைய ப்ரயோஜநமும் அபிமாநமும் தன்னதென்கிறது: '' ணக எவாவிதீயம் '' [சா-6-2.] என்று ஸஹகாரி நைரபேக்ஷ்யம் சொல்லுகிறது. இந்த ஸஹாயாந்தர நைரபேக்ஷ்யம் தன்னை ''தனி மாப்புகழ் எஞ்ஞான்றும்'' [திருவாய்-8-10-8] என்கிற பாட்டிலே ஆழ்வார் அருளிச்செய்தாரிறே; இத்தால் அர்த்தித்வ நிரபேக்ஷமாக இவற்றை உண்டாக்கினவன் அர்த்தித்வமும் உண்டாகுல் ரக்ஷிக்கச் சொல்ல வேண்டாவிறே என்கை; சரம ச்லோகத்தில் 'ணக' பதம் உபாய நைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகிறது. இந்த 'ணக' பதம் உத்பாதகத்வத்தில் நைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகிறது.

தயா ஸ:ஹாரகः—ஸ்ருஷ்டியோபாதியும் ஹிதகாமனாய் ஸம்ஹரிக்கிறாய் நீ ஒருவனுமேயன்றோ? புருஷார்த்தோபயோகியாக சரீரத்தைக் கொடுக்க, இத்தைக் கொண்டு பாஹ்யஸாதிகளிலே இழிந்து அதிப்ரவ்ருத்தனாய்த் தன்னை நசிப்பித்துக் கொள்ளுமளவிலே அந்தச் சரீரத்தையும் அழியச் செய்கை ஹிதமேயிறே. இத்தாலும் சரண்யதையைச் சொல்லுகிறது. இவன் தன்னை இவன்கையில் காட்டிக் கொடாமையால்.

---

இருந்தும் துர்லபமாக இருப்பதால் நித்ய தரித்ரனுக இருக்குமவனுக்கும் நிஷ்ப்ரயோஜநமாக இருக்குமாப்போல, இவ்வீச்வரனுடைய மஹிமையும் ஸௌலப்யமுமில்லாத போது வ்யர்த்தமாகுமேயென்று சங்கிக்கவொண்ணாதபடி ஸாம்ய ஸௌலப்யாதிகள் விஞ்சி இருக்கையினாலே 'ஏழை யேதலன் கீழ்மகனென்னாது' என்கிறபடியே நிஷாத வாநர கோபாலாதிகளுக்கும் தல்பனுக அநுபவிக்கலாம்படி யிருக்கும் ப்ரகாரத்தை 'தெவாநாம்' என்கிற ச்லோகத்தில் ஸாதாரணூ இயிதைவதம் ஸவ-ஜா என்று சொல்லி, இப்படிப் புத்ர விஷயத்தில் பிதாவைப்போல பக்ஷபாதமின்றிக்கே ஸர்வஸமனாய் ஸுலபனுயுமிருப்பதற்குக் காரணம், 'திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான், பெய்த காவு கண்டீர் பெருந் தேவுடை மூவுலகே' என்கிறபடியே இவ்வுலகெல்லாம் அவன் விதைத்து வளர்த்த பயிராக இருக்கையன்றோ வென்கிற விஷயத்தைச் சொல்லுகிறது ணகஸ்வலஉவி என்கிற ச்லோகம்'

இவ்வுலகத்தை ஸ்ருஷ்டிப்பவனும் ஸம்ஹரிப்பவனும் நீ ஒருவனே என்று சொன்ன இத்தால் ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டிப்பவனுகவும் ருத்ரனை ஸம்ஹரிப்பவனுகவும் புராணங்களில் சொல்லுமது, 'ணதள அனாவிஸ்யய ஶ்ரேஷ்டள ப்ரஸாத க்ரோதஜளதள । தஜாதஸி-தத வாயாநள ஸ்ருஷ்டி ஸ:ஹாரகாரகள



வெஸ்யவ ணகஸ்வ நாசாஜய வ்யவஹாராஜராசெ ராவவாதகஸ்வாக, உ்ரவ்யாஜராதபஸதநா அ்' இதி காரணஸெவாவஸ்தாஜராவஹம் காயத்ரிதிது்அ்யத இதயூ்ஜ்ஜ ।

நந-'நிரயிஷாந ஹ்ரசாஸ:ஹவ ஜீ்வநாய அஸந்தாயதவாத நிராஸ: க்ரியதெ ; தயாஹி—ணகம் தி்ரவம் ஸதயெவ அவிதயா

---

படி மறுக்கக்கூடும்? என்னில், இரண்டு காரணங்களால் மறுக்கக்கூடும் என்று நாம் சொல்வோம்:—(1) 'உன்னால் வேறொரு த்ரவ்யம் என்று அங்கீகரிக்கப்படும் த்ரவ்யம் காரணத்ரவ்யமே. இரண்டுமொன்று; காரணத்ரவ்யமே வேறொரு அவஸ்தையை அடைந்து மற்றொரு பெயர் மற்றொரு வ்யவஹாரம் இவைகளை அடைகின்றது' என்று உபபாதிக்கக்கூடும்; (2) நீ சொல்வது போல வேறொரு த்ரவ்யம் புதிதாகத் தென்படவுமில்லை. ஆகையால், காரண த்ரவ்யமே மற்றொரு அவஸ்தையுடன் கூடியதாகக் கொண்டு கார்யத்ரவ்யமென்று சொல்லப்படுகின்றது என்பதே ஸித்தாந்தம்.

நந.........உக்தம்—இவ்விடத்தில் சிலர் ஒரு ஆக்ஷேபம் செய்யலாம். அதாவது—'ஸர்வமும் அபாரமார்த்திகம் என்று வாதிப்பவர்களின் மதத்தைக் கண்டிக்கும் பொருட்டே இந்த ''அஸதெவ '' இத்யாதி வாக்யங்கள் ப்ரவ்ருத்திக்கின்றன. ப்ரஹ்ற

---

உவவாதகஸ்வாக த்ரவ்யாஜரதபஸதநாஅ்—இந்த இரண்டு பதங்களுக்குப் பிறகு 'த்ரவ்யாஜரம் நிரஸ்யதெ' (வேறுபட்ட த்ரவ்யம் என்பது மறுக்கப்படுகின்றது) என்பதை அந்வயத்திற்காகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

நந—'அஸதா இதமக்ர ஆஸீத்' இத்யாதியால், கார்ய த்ரவ்யங்களெல்லாம் அபாரமார்த்தங்களென்றும், கார்ய த்ரவ்யங்கள் காரண த்ரவ்யங்களைக் காட்டிலும் வேறு பட்டவைகளென்றும் சொல்லும் வைசேஷிகர்களின் மதம் நிரஸநம் செய்யப்படுகிற தென்பது ஸ்ரீ பாஷ்யகாரருடைய நிர்வாஹம். ஸத் வித்யையில் உபக்ரமத்தில் காணப்படும் வாக்யங்களுடைய ஸ்வாரஸ்யத்தின் ஆநுகுண்யமே இந்த நிர்வாஹத்திற்கு முக்யமான காரணம்; ப்ரதிஜ்ஞாதமாயுள்ள 'ஒன்றின் விஜ்ஞாநத்தால் ஸர்வத்தின் விஜ்ஞாநம் எற்படுகின்றது' என்னும் அர்த்தத்தின் உபபாதநத்திற்கு அந்தரங்கமாகவும் இந்த நிர்வாஹமே அபேக்ஷிதமாக இருக்கின்றது. இப்படி இருக்க ஸ்ரீ சங்கராசார்யர், இந்த அஸத்கார்ய வாதத்தால் சூந்ய வாதிகளாகிற மாத்யமிகர்களுடைய மதமே நிரஸநம் செய்யப்படுகின்றதென்று வ்யாக்யாநம் செய்திருக்கிறார். அந்த வ்யாக்யாநம் ஸங்கதமன்று என்பதை ஸ்ரீ பாஷ்யகாரர் இவ்விடத்தில் உபபாதிக்கிறார்.

ஸ்ரீ சங்கராசார்யருடைய விவரணமாவது—'சித் ரூபமான வஸ்து ஒன்றே உண்டு என்பதும், அந்த வஸ்து அவித்யையால் மறைக்கப்பட்டு ஜகத் ரூபமாகத் தோன்றுகின்றது என்பதும், அந்த வஸ்துவைத் தவிர்த்து வேறு வஸ்து ஒன்றும்

...பாதிதம் ப்ரஹ்மஸ்வரூபேண விவர்த்ததே இதி அவித்யாச்ரயத்வாய மூலகாரணம் ஸத்யமிதி தத்ஸ்வரூபஸ்ய ப்ரஸங்கவத்' இத்யஸத்கார்யவாத நிராஸ: । நைதத்

---

யம் என்பது அவித்யையால் மறைக்கப்பட்டதாய்க் கொண்டு ஜகத் ரூபமாகக் காணப்படுகின்றது என்று சொல்வது உபபந்நமாவதற்கு, அவித்யையால் ஆச்ரயிக்கப்படும் மூலகாரணம் பரமார்த்தமான வஸ்துவாகவே இருத்தல் வேண்டும்; அப்படி யில்லாவிட்டால், நிரதிஷ்டாந ப்ரமம் ஸம்பவிக்கும். அது ஸம்பவிக்கக் கூடாதன்றோ? ஸர்வமும் அபாரமார்த்திகம் என்று சொல்பவர் மதத்தில் அது சேர்கின்றதாதலால் இவ்விடத்தில் அந்த அஸத்கார்ய வாதம் நிரஸிக்கப்படுகின்றது'. இதுதான் ஆக்ஷேபம்; இது நிலை பெறாது. ஸர்

---

இல்லை என்பதாம் ச்ருதியின் தாத்பர்யம். அந்தத் தாத்பர்யத்தையே இந்த ஸத் வித்யா வாக்யங்கள் வெளியிடுகின்றன. மாத்யமிகர்களுடைய மதம், காரண வஸ்து உள்பட எல்லாம் சூந்யம் என்பதாதலால், அந்த மதத்தை ச்ருதி வாக்யம் இவ்விடத்தில் நிரஸிக்க ப்ரவ்ருத்திக்கின்றது. எப்படி நிரஸிக்கின்ற தென்றால்— அவித்யை என்பது பரமார்த்தமான ஒரு வஸ்துவை ஆச்ரயித்தே ப்ரபஞ்சமாகிற இந்த ப்ரமத்தைத் தோற்றுவிக்க வேண்டுமாதலால், அப்படிப் பரமார்த்தமான ஒரு வித வஸ்துவையும் ஒத்துக்கொள்ளாத மாத்யமிகர்களுடைய மதம் ஆதரிக்கத்தகுந்த தன்று என்பதே. அதாவது—மாத்யமிகர்களுடைய மதத்தில் கார்ய வஸ்து போல அதிஷ்டாநமும் அபரமார்த்தமாக இருக்கிறபடியால் ப்ரமம் என்பதே ஸம்பவிக்கமாட்டாது என்று சொன்னதாயிற்று. இப்படிப்பட்ட நிரதிஷ்டாந ப்ரமத்தின் அஸம்பவத்தை ஜ்ஞாபிப்பதற்காகவே இந்த அஸத் கார்ய வாதம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டு நிரஸிக்கப்படுகின்றது.' இதுதான் ஸ்ரீ சங்கராசார்யருடைய வ்யாக்யாநம்.

நைதத்ஸேவம்—மாத்யமிகர்களுடைய மதத்தின் நிரஸநம் ஸ்ரீபாஷ்யகாரருக்கு இஷ்டமேயானாலும், அது ப்ரகரணத்திற்கு அஸங்கதமென்பதே அவருடைய அபிப்ராயம். 'ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகின்றது' என்பது ஸத் வித்யையில் ப்ரதிஜ்ஞாதமான அர்த்தம். 'முதலில் அஸத்தாகவே இந்த ப்ரபஞ்சம் இருந்தது; பிறகுதான் ப்ரபஞ்சத்திற்கு உத்பத்தி ஏற்பட்டது' என்று சொல்லும் வைசேஷிகர்களுடைய மதத்தில் இந்த ப்ரதிஜ்ஞை அந்வயிக்கமாட்டாதாகையால், இந்த ப்ரதிஜ்ஞையின் ஸமர்த்தநத்திற்கு அந்த வைசேஷிக மத நிரஸநம் அவச்யம் அபேக்ஷிதம்; ஆகையால் அந்த மதமே இந்த ப்ரகரணத்தில் நிரஸிக்கப்பட வேண்டும். மாத்யமிகர்களோ வென்றால், 'முதலிலும் எல்லாம் சூந்யம், பிறகும் எல்லாம் சூந்யம்' என்று சொல்லுகிறபடியால், அவர்களுடைய மதத்தில் இந்த ப்ரதிஜ்ஞை அந்வயிக்கமாட்டாது என்பது இல்லை; ஆகையால் அவர்களுடைய மதத்தின் நிரஸநம் இந்த ப்ரதிஜ்ஞையின் ஸமர்த்தநத்திற்கு அநபேக்ஷிதம். 'மாத்யமிகர்களுடைய மதமே இவ்விடத்தில் நிரஸிக்கப்படுகின்றது' என்று சொல்லும் அத்வைதிகளுடைய வ்யாக்யாநம் அஸங்கதம் என்று சொல்வதற்கு இது முக்ய ஹேது. இன்னமும் ஒரு ஹேது உண்டு. ஸத் வித்யையில், இந்த ப்ரதிஜ்ஞையை உபபாதிக்கும் பொருட்டு உதாஹரிக்கப்பட்டுள்ள "யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந



ஸேவம் । ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தாப்யாம் ஸத்கார்யவாதமேவோபபாதயதி ப்ரஸக்தஸ்வாதித்யர்த: । ஸர்வசேஷ நிரதிஷ்டாந ப்ரமாஸம்பவஸ்ய துர்வசத்வாத் । யஸ்ய ஹி ஏதந்மத தோஷ:

---

ஸர்வமும் அபாரமார்த்திகம் என்று வாதிப்பவர்களுக்கு இவ்விடத்தில் ப்ரஸக்தியே இல்லை. ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகும் என்னும் ப்ரதிஜ்ஞையும் ம்ருத் பிண்டம் முதலான த்ருஷ்டாந்தங்களும் ஸத்கார்ய வாத ஸம்பந்தமாகவே ப்ரஸ்துதமாயிருக்கிறபடியால், அதற்கு உபயோகியாக வைசேஷிகர்களின் அஸத்கார்யவாதம் நிரஸநம் செய்யப்பட வேண்டுமே தவிர, அப்ரஸக்தமான மற்றொரு வாதத்தின் நிரஸநம் செய்யப்படு

---

ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத்"(மண்பிண்டத்தை அறிந்தால், அதன் விகாரமாயுள்ள குடம் முதலானது அறியப் படுவதுபோல்) என்னும் த்ருஷ்டாந்தம், கார்யம் பரமார்த்தமாயிருப்பதுடன் காரணமும் பரமார்த்தம் என்பதைக் குறிக்கின்றது. கார்யத்தைப் பரமார்த்தமென்று ஒத்துக்கொண்டு காரணத்தை அபரமார்த்தமென்று சொல்லும் வைசேஷிகர்களுடைய மதத்திற்கு இந்த த்ருஷ்டாந்தம் அநந்விதம். ஆகையால் அந்த த்ருஷ்டாந்தத்தின் ஸமர்த்தநத்திற்கும் இவர்களுடைய மத நிரஸநம் அவச்யம் அபேக்ஷிதம். 'கார்யம் காரணம் இவை இரண்டும் அபரமார்த்தம்' என்று சொல்லும் மாத்யமிகர்களுடைய மதத்திற்கு இந்த த்ருஷ்டாந்தம் பொருந்துமா பொருந்தாதா என்று விசாரிக்க ப்ரஸக்தியே இல்லையாகையால் அவர்களுடைய மத நிரஸநம் இவ்விடத்தில் அநபேக்ஷிதமே. இந்த இரண்டு ஹேதுக்களும், "ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தாப்யாம் ஸத்கார்யவாதமேவோபபாதயதி ப்ரஸக்தஸ்வாத்" என்னும் வாக்யத்தால் சொல்லப்படுகின்றன.

ஸர்வசேஷ நிரதிஷ்டாந ப்ரமாஸம்பவஸ்ய துர்வசத்வாத்— 'மாத்யமிக மத நிரஸநம் செய்யப்படுகின்றது' என்பதற்கு அத்வைதிகளாற் சொல்லப்படும் ஹேது, 'ப்ரமம் ஏற்படுவதற்கு, அதிஷ்டாநம் பரமார்த்தமாக இருக்கவேண்டும்; மாத்யமிகர்களுடைய மதத்தில் அதிஷ்டாநம் அபரமார்த்தமாகையால், அவர்களுடைய மத ப்ரகாரம் நிரதிஷ்டாந ப்ரமம் ப்ரஸங்கிக்கின்றது; அது அநிஷ்டம்' என்பதன்றோ? முதலில், இந்த வாதம் யுக்தியுக்தமாக இருக்கின்றது என்பதை ஒத்துக்கொண்டாலும், அது ப்ரகரணத்திற்கு ஒத்ததன்று என்றே சொல்லவேண்டும். இரண்டாவது, 'த்ரஷ்டா (பார்க்கிறவன்) பொய்; தோஷம் பொய்; தர்சநம் பொய்; இவை யெல்லாம் பொய்யாக இருந்தபோதிலும் ப்ரமம் ஸம்பவிக்கக்கூடும் என்று அத்வைதிகள் ஒத்துக்கொள்ளுகையில், ஆச்ரயமும் பொய்யாக இருந்தால் ப்ரமம் ஸம்பவிக்கமாட்டாதோ என்று பயப்படுவதற்குக் காரணமொன்று மில்லை. ப்ரம ஹேதுக்களான ஸாமக்ரிகளுள் சில பொய்யாக இருக்கலாம்; அதிஷ்டாநம் மாத்ரம் ஸத்யமாக இருக்க வேண்டும் என்று சொல்வதற்கு விநிகமகம் ஒன்றுமில்லை. இதுதான் துர்வசத்வாத் என்பதன் தாத்பர்யம். ஆகையால், மாத்யமிகர்களுடைய மதமே இவ்விடத்தில் நிரஸிக்கப்படுகின்றது என்பதற்கு நீங்கள் சொல்வது ஹேதுவாகமாட்டாது என்பது தான். இந்த அர்த்தத்தைத் தான்

வாரமாயி-ககொ தொஷாஶ்ரயகூம் அ வாரமாயி-ககம், தஸ்ய வாரமாயி-கக தொஷெண யு-க்தஸ்ய சுவாரமாயி-கக மாயவ-நமராதி ஊபஐ-ந ஈவ வஜூ ; யஸ்ய து தொஷபூாவாரமாயி-ககொ தொஷாஶ்ரயகூம் அாவார

---

கின்றது என்று சொல்வது உபபந்நமாகாது. (நிர்திஷ்டனுக ப்ரமம் ஸம்பவிக்கமாட்டாது என்பதை ஜ்ஞாபிப்பது இவ்விடத்தில் அபிப்ரேதம்). தவிரவும், அதிஷ்டானம் அபரமார்த்தமாக இருந்தால் உங்களுடைய மதத்தின்படி அந்த ப்ரமத்தின் அஸம்பவத்தை உபபாதிப்பது ச்ரமம் (அதாவது, அந்த ப்ரமம் ஸம்பவியாமற் போய்விடும்) என்பதும் இல்லை. ஏனென்றால், எவனுடைய மதத்தில், சேதநனிடத்தில் இருக்கும்

---

“ யஸ்ய ஹி.........நிரயிஷாந ஹ்ரஊஸம்ஹவ: ” என்னும் வாக்யங்களால் உபபாதிக்கிறார்

மாயவ-நமராழ—அஸத் வஸ்து விஷயகமான ப்ரமம். இல்லாத வஸ்து இருப்பது போலத் தோன்றினால் அந்தத் தோற்றத்தைக் கந்தர்வ நகரமென்று சொல்வார்கள்.

ஸொாயகவாக்யேஷ்வபி—இப்படி ஸத் வித்யா வாக்யங்களில், விசேஷங்களை நிஷேதிக்கும் சப்தமொன்றும் காணப்படவில்லை என்பதை நிரூபித்து விட்டு, இன்னும் வேறு எந்த ச்ருதி வாக்யங்களை விசேஷ நிஷேத பரங்களென்று அத்வைதிகள் சொல்லுகிறார்களோ அவைகளுக்கும் பேத நிஷேத பரத்வம் இல்லை என்பதை உபபாதிப்பதற்காக ச்ருதியில் காணப்படும் சோதக வாக்யங்களைப்பற்றி ப்ரஸ்தாவிக்கிறார். ‘ஸொாயகவாக்யேஷு’ என்பதன் பொருளை 29, 66-வது பக்கங்களில் காண்க.

ஸாமாநாயிகரண்ய வ்யுத்பத்தி............ஸகாரயூாவஸொயதழ—ஸாமாநாதி கரண்யம் என்றால் என்ன என்பதை 80, 81-வது பக்கங்களில் காண்க.

ஸத்வித்யா வாக்யங்கள் முதலான காரண வாக்யங்களிலும், ஸத்யம் ஜ்ஞாநம் முதலான சோதக வாக்யங்களிலும் ஒன்றிலும் விசேஷ நிஷேத பரமான சப்தமொன்றும் காணப்படவில்லை என்பதை நிரூபித்த பிறகு, ஒருகால் அத்வைதிகள் ‘ஸத்வித்யா முதலானவைகளில் பேத நிஷேத பரத்வம் வ்யக்தமாகத் தெரியவில்லை, பேத நிஷேதத்தை வ்யக்தமாகச் சொல்லும் வேறு ச்ருதி வாக்யங்கள் இருக்கின்றன’ என்று சொல்வார்களோ வென்று சங்கித்து, அப்படி பேத நிஷேதத்தை வ்யக்தமாகச் சொல்வது போல் காணப்படும் சில ச்ருதி வாக்யங்களை எடுத்துக் கொண்டு அவைகளின் அர்த்தத்தைப் பரிசோதிக்கிறார். அப்படி இரண்டு வாக்யங்களை இவ்விடத்தில் விசாரிக்கப் படுகின்றன.

“ அயாத ஆதெஶொ நெதி நெதி ”—இந்த வாக்யம் ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் நாலாவது அத்யாயத்தில் மூன்றாவது ப்ராஹ்மணத்தில் காணப்படுகின்றது. அதன் ப்ரகாணத்தை முதலில் தெரிந்துகொள்வோம். அவ்விடத்தில் ச்ருதி,



ஊயி-ககம், தஸ்யாவாரமாயி-ககெநாவ்யாஶ்ரயெண தஜ-வவஹூதி ஹவதுிஷெ ந நிரயிஷாநஹ்ரஊஸம்ஹவ: । ஸதஸிுாயகவாகெ்யஷ்வபி ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ஹ்ரஹ்ம' ஆநநெ்ா ஹ்ரஹ்ம' இத்யாதிஷு ஸாமா

---

தோஷ ஸம்பந்தமும் தோஷம் ஆச்ரயித்திருப்பதும் பாரமார்த்திகமோ, அவனுடைய மதத்தில், பாரமார்த்திகமான தோஷத்துடன் கூடினவனுக்கு அபாரமார்த்திகங்களாயுள்ள கந்தர்வ நகரம் முதலிய ப்ரமங்களின் தர்சநம் உபபந்நமாகும்; எவனுடைய மதத்தில் தோஷ ஸம்பந்தமும் அபாரமார்த்திகமோ தோஷம் ஆச்ரயித்திருப்பதும் அபாரமார்த்திகமோ அவனுடைய மதத்திலும் ஆச்ரயம் அபாரமார்த்திகமா யிருந்தபோதிலும் அம்மாதிரியான ப்ரம தர்சநம் உபபந்நமாகக் கூடுமாகையால், உங்களுடைய மதத்தில் நிர்திஷ்

---

“ ஹெவாவ ஹ்ரஹ்மணொ ரூவெ மூத்தஂ சாமூத்தஂ ச ”

(ப்ரஹ்மத்திற்கு இரண்டு சரீரங்கள்; அவைகளுள் ஒன்று கடிநம், மற்றொன்று கடிநமல்லாதது) என்று ஆரம்பித்து,

“ தஜெதநூத்தழ ”

(கடிநமான ரூபமாவது) என்று மூர்த்த ரூபத்தின் லக்ஷணத்தையும்,

“ அயாமூத்தஂ ”

(அகடிநமான ரூபமாவது) என்று அமூர்த்தத்தின் லக்ஷணத்தையும் விஸ்தாரமாக உபபாதித்து விட்டு, மற்றும் சில வாக்யங்களால் மூர்த்தா மூர்த்த ரூபோபாஸந சிந்தா ப்ரகாரத்தைப் பற்றிப் பேசின பிறகு,

“ அயாத ஆதெஶொ நெதி நெதி ”

என்னும் வாக்யத்தைச் சொல்லுகின்றது. இதன் பொருள்:—இவ்விடத்திற் செய்யப்படும் உபதேசம் என்னவென்றால், இப்படிப்பட்டதன்று இப்படிப்பட்டதன்று என்பது தான். அதாவது—மூர்த்தா மூர்த்தாத்மகமான இரண்டு சரீரங்கள் ப்ரஹ்மத்திற்கு உண்டு என்று சொல்வதால் ‘இவ்வளவு’ என்னும் ஒருவித பரிச்சேதம் ப்ரஹ்மத்திற்குச் சொல்லப்பட்டது போல் ஆயிற்று; அப்படிப்பட்ட எவ்வித பரிச்சேதத்தையும் அது உடையதன்று என்பது தாத்பர்யம். அம்மாதிரியான சரீரங்களுடன் கூடியிருப்பதால் உண்டாகக்கூடிய எவ்வித பரிச்சேதமும் ப்ரஹ்மத்திற்கு ஸம்பவிக்க மாட்டாது என்பது கருத்து. இந்த அர்த்தமே ப்ரகரணத்திற்கு ஒத்தது. அத்வைதிகள் சொல்வது போல, ‘நேதி நேதி’ (இப்படிப் பட்டதன்று இப்படிப் பட்டதன்று) என்னும் வாக்யத்திற்கு, ‘ப்ரபஞ்சமே இல்லை’ என்று அர்த்தம் கொள்வது ப்ரகரணத்திற்கு அநுகுணமன்று. தவிரவும், இந்த வாக்யத்திற்குப் பிறகு அந்த ச்ருதியிலேயே,

நாயிகத்வாச்ச ஶ்ருத்யந்தர விஜ்ஞாநைகமாணவிப்ரதிஷேதாத்ஸ்வாபாவிக ஸமஸ்த கல்யாண விஶிஷ்டம் ப்ரஹ்மாபிதீயத இதி ஸத்யமே வோக்தம் ।

---

டாத ப்ரமத்தின் அஸம்பவம் துருபாதமே. "ஸத்யம் ஜ்ஞாநம்" "ஆநந்தோ ப்ரஹ்ம" என்பவை முதலான சோதக வாக்யங்களாலும் ஸமஸ்த கல்யாண குண விசிஷ்டமாகவே ப்ரஹ்மம் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் கீழே விவரித்திருக்கிறோம். ஸாமாநாதிகரண்யத்தின் சரியான அர்த்தம் என்னவென்றும், அதைச் சரிவரத் தெரிந்து

---

"ந ஹ்யேதஸ்மாதிதி நேத்யந்யத் பரமஸ்தி"

என்னும் வாக்யமும் காணப்படுகின்றது. இதன் பொருள்:—இதி 'நேதி' (யதுக்தம் ப்ரதிபாதிதம், தஸ்மாத்) ஏதஸ்மாத் அந்யத் (வஸ்து) பரம் ந ஹ்யஸ்தி—கீழ்ச் சொல்லியிருக்கிறபடி 'இப்படிப் பட்டதன்று' என்று யாதொரு ப்ரஹ்மம் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றதோ அதைக்காட்டிலும் வேறொரு உத்க்ருஷ்டமான வஸ்து இல்லை. 'அந்யத் பரம் நாஸ்தி' (வேறொரு உத்க்ருஷ்டமான வஸ்து இல்லை) என்று சொல்வதற்குப் பதிலாக 'அந்யந் நாஸ்தி' (வேறொரு வஸ்து இல்லை) என்று மாத்ரம் சொல்லியிருக்கும் பக்ஷத்தில் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் பின்னமான மற்றைப் பொருளெல்லாம் நிஷேதம் செய்யப்படுகின்றது என்று சொல்லக்கூடும். அப்படிச் சொல்லவில்லையே. இந்த வாக்யத்தின் பிறகும்,

"அத நாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யம்—ப்ராணா வை

ஸத்யம், தேஷாமேஷ ஸத்யம்"

என்றொரு வாக்யத்தைச் சொல்லி அந்த ப்ரகரணம் முடிகின்றது. இதன் பொருள் —ப்ராணா வை ஸத்யம்—ப்ராணன்கள் என்று சொல்லப்படும் ஜீவன்கள் ப்ரக்ருதியைப்போல் எவ்வித ஸ்வரூப விகாரம் மற்றவையானதால் ஸத்யம், என்று சொல்லப்படுகின்றன; தேஷாமேஷ ஸத்யம்—பரமாத்மா, அந்த ஜீவன்களைப்போல ஜ்ஞாநத்தின் ஸங்கோச ரூபமான விகாரமற்றதாதலால், அவைகளைக் காட்டிலும் ஸத்யம் என்று சொல்லப்படுகின்றது; அத ஸத்யஸ்ய ஸத்யம் (இத்யஸ்ய) நாமதேயம்—ஆகையால் இந்தப் பரமாத்மாவுக்கு 'ஸத்யத்துக்கும் ஸத்யம்' என்று பெயர் வழங்குகின்றது. இந்த வாக்யத்தால் ப்ரஹ்மத்திற்கு ஸத்யத்வம் முதலிய குணங்களும் ப்ரதிபாதிக்கப் படுகின்றன. இப்படி இருக்கையில் "நேதி நேதி" என்பதால் ஸமஸ்த பேதங்களும் நிஷேதிக்கப் படுகின்றன என்று எப்படிச் சொல்லக்கூடும் ?

ப்ரஹ்மணோ ரூபதயா ப்ரஜ்ஞாதம் ஸர்வம் ரூபதயா உபதிஶ்ய—இந்த ச்ருதி, முதலில், 'மூர்த்தாமூர்த்தமான ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மத்



"அதாத ஆதேஶோ நேதி நேதி" இதி ப்ரஹ்மணோ நிஷேதோ ப்ரஸ்துத இதி சேத், கிமத்ர நிஷித்யத இதி வக்தவ்யம் । "த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தஞ்சாமூர்த்தஞ்ச" இதி மூர்த்தாமூர்த்தாத்மக: ப்ரபஞ்ச: ஸர்வோऽபி நிஷித்யத இதி சேத் ப்ரஹ்மணோ ரூபதயா ப்ரஜ்ஞாதம் ஸர்வம் ரூபதயோபதிஶ்ய புநஸ்தஸ்யைவ நிஷேதாநுபபத்தே:, "ப்ரக்ஷாலநாத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்ஶநம் வரம்"

---

கொண்டால் ஒரே வஸ்துவுக்கு அநேக குணங்களுடன் கூடியிருக்கும் தன்மை விருத்தமன்றென்றும் இவ்விடத்தில் விவக்கப்பட்டிருக்கின்றது.

"அத"........ஆதேஶ:—"அதாத ஆதேஶோ நேதி நேதி" (உபதேசம் செய்யப்படுகின்றது; அது என்னவென்றால், இவ்விதம் இல்லை இவ்விதம் இல்லை என்பதுதான்) என்னும் வாக்யத்தில் ஸ்பஷ்டமாக நிஷேதம் காணப்படுகின்றதே என்னில், இவ்விடத்தில் நிஷேதிக்கப்படுவது என்ன ? என்பதைச் சொல்ல வேண்டும். "த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தஞ்சாமூர்த்தஞ்ச" (ப்ரஹ்மத்துக்கு இரண்டு சரீரங்கள் ப்ரஸித்தங்கள்; கடிநமாயிருப்பதொன்று, கடிநமில்லாமல் இருப்பதொன்று) என்னும் வாக்யத்தால் கடிநமான பொருள்கள் கடிநமில்லாத பொருள்கள் ஆகிய இவைகளை ஸ்வரூபமாகவுடைய ப்ரபஞ்சம் முழுவதுமே நிஷேதிக்கப்படுகின்றது என்னில், அது யுக்தமாக மாட்டாது. ஏனென்றால், இது வரையில் அறியப்படாமல் இருந்த 'ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மத்தின் ரூபம்' என்னும் விஷயத்தை முதலில் உபதேசித்துவிட்டு, மறுபடியும் அதை நிஷேதிப்பது என்பது எப்படி யுக்தமாகும்? சேற்றைப் பூசிக்கொண்டு பிறகு அதை அலம்புவதைக்காட்டிலும் சேற்றைத்

---

திற்குச் சரீரம்' என்று உபதேசித்துவிட்டு, உடனே அந்த ப்ரபஞ்சத்தையே அது நிஷேதிக்கின்றது என்று சொல்வது யுக்தமாகமாட்டாது. அப்படி நிஷேதித்தால் ச்ருதியின் வார்த்தை நம்பிக்கைக்குப் பாத்ரமாகாமல் போக ப்ரஸங்கிக்கும்; நிஷேத வாக்யமும் அப்ராமாணமாக ப்ரஸங்கிக்கும். அது அநிஷ்டமன்றோ ? ப்ரபஞ்சம் எல்லாருக்கும் தெரிந்த வஸ்துவானாலும், 'அந்த ப்ரபஞ்சம் ப்ரஹ்மத்திற்குச் சரீரம்' என்னும் விஷயம்; எல்லாருக்கும் தெரிந்ததன்று ; அப்படி அறியப்படாமல் இருக்கும் விஷயத்தையே இவ்விடத்தில் ச்ருதி உபதேசிக்கின்றது என்பதை 'அப்ரஜ்ஞாதம்' என்னும் சப்தம் விளக்குகின்றது. அப்படி உபதேசிக்கப்படும் விஷயம் நிஷேதார்ஹமாகக் கூடாது என்பது குறிப்பு.

"ப்ரக்ஷாலநாத்தி பங்கஸ்ய......"—இப்படி முதலில் உபதேசித்துப் பிறகு நிஷேதிப்பதன் அநுபபத்தியைக் காண்பிக்க இந்தப் புராண வசநம் இவ்விடத்தில் சொல்லப்படுகின்றது. இதன் பொருள்—'சேற்றைப் பூசிக்கொண்டு அலம்புவதைக் காட்டிலும், சேற்றைத் தொடாமல் இருப்பது ச்லாக்யமன்றோ? ' என்பது.

இதி ந்யாயாத் । கஸ்தர்ஹி நிஷேத வாக்யார்த்த:? ஸூத்ரகார: ஸ்வயமேவ வததி “ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி ததோ ப்ரவீதி ச பூய:” இதி । உத்தரத்ர “அத நாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யம் ப்ராணா வை ஸத்யம் தேஷாமேஷ ஸத்யம்” இதி ஸத்யாதி குணகணஸ்ய ப்ரதிபாதிதத்வாத் ‘ஸர்வம் ப்ரக்ருதைதாவத்த்வம் ந ஹந்தி ப்ரஹ்ம’ இதி ப்ரஹ்மணஸ்தாவன்மாத்ரதா ப்ரதிஷித்யதே இதி ஸூத்ரார்த்த: । “நேஹ நாநாஸ்தி கிஞ்சந” இத்யாதிநா நாநாத்வப்ரதிஷேத ஏவ க்ரியதே இதி சேத், ச்ருத்யந்தரத்ர “ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந:”

---


தொடாமலிருப்பதே ச்லாக்யம். அதுபோல புதிதாக ஒன்றை உபதேசம் செய்துவிட்டு, பிறகு அது பொய் என்று நிஷேதிப்பதைக் காட்டிலும் உபதேசம் செய்யாமலிருப்பதே ச்லாக்யமாகு மன்றோ? ஆனால் இவ்விடத்தில் தென்படும் நிஷேத வாக்யத்தின் அர்த்தமென்ன? என்றுகேட்டால், அதற்கு ஸமாதாநத்தை ஸூத்ரகாரரே “ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி ததோ ப்ரவீதி ச பூய:” (ப்ரஹ்மம் என்பது கீழ்ச் சொல்லப்பட்டுள்ள அளவுடன் கூடியது அன்று என்று அந்த அளவு மாத்ரத்தை ச்ருதி நிஷேதிக்கின்றது) என்று சொல்லி இருக்கிறார். ஏனென்றால், இந்த நிஷேதம் செய்த பிறகும், ச்ருதி, “அத நாமதேயம்” இத்யாதியான வாக்யத்தால் ப்ரஹ்மத்திற்கு ஸத்யம் முதலான அநேக குண கணங்களைச் சொல்லுகின்றதன்றோ? “நேஹ நாநாஸ்தி கிஞ்சந” என்பது முதலான வாக்யத்தால் ப்ரஹ்மத்திற்கு நாநாவாக (பல வகைப் பட்டதாக) இருக்கும் தன்மை நிஷேதிக்கப் படுகின்றதே என்னில், இவ்விடத்திலும்

---

ஸூத்ரகார:—ப்ரஹ்ம ஸூத்ரகாரர். “ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி ததோ ப்ரவீதி ச பூய:” என்பது ப்ரஹ்ம ஸூத்ரத்தில் 3-வது அத்யாயம் 2-வது பாதம் 21-வது ஸூத்ரம். இதன் பொருள்:—ப்ரக்ருதை:—‘ப்ரஹ்மத்திற்கு இரண்டு ரூபங்கள்’ என்பது முதலான வாக்யத்தால் ப்ரதிபாதிதங்களாயுள்ள ரூபங்களால், ஏதாவத்த்வம்—யாதொரு பரிச்சிந்நத்வ லக்ஷணமான ப்ரகாரம் ப்ரஹ்மத்திற்கு ப்ரஸங்கிக்குமோ அந்த ப்ரகாரத்தை யன்றோ, ப்ரதிஷேததி ஹி—‘இப்படிப்பட்டதன்று இப்படிப்பட்டதன்று’ என்னும் வாக்யம் நிஷேதிக்கின்றது? தத:—அந்தக் காரணத்தினாலேயே, பூயோ ப்ரவீதி ச—அப்படி நிஷேதித்த பிறகும், மறுபடியும் ப்ரஹ்மத்திற்கு ஸத்யத்வம் முதலான குணத்தைச் சொல்லுகின்றது. ஆகையால் ‘நேதி நேதி’ என்பது ப்ரஹ்ம[illegible] ஸவிசேஷத் தன்மையை நிஷேதிக்கவில்லை; ப்ரஸ்துதமான பரிச்[illegible]த்தை [illegible]திக்கின்றது என்று சொல்லவேண்டும்,

186280


# உம்மிடி ராமய்யா செட்டி குருசாமி செட்டி கம்பெனி
## நகை வர்த்தகர்கள்.



தொழிற்சாலை.

62, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை

காட்சி அறை.

25, சைனுபஜார் ரோட், மதராஸ்.

## நம்பிக்கை.

நகைகள் நாணயமாகவும், நம்பிக்கையாகவும் செய்து கொடுக்கப்படும். தேவையில்லாத நகைகள் 8 நாட்களுக்குட்பட்டுக் கொண்டுவந்தால் பூராப் பணமும் திருப்பிக் கொடுக்கப்படும். சவரன் பொன்னுக்கும் சீமை வெள்ளிக்கும் கியாரண்டி கொடுக்கப்படும். ஒரு முறை எங்களிடம் வாங்கியவர்களுக்கு அதன் உண்மை தெரியவரும்.



காட்லாக்குக்கு எழுதுங்கள்.

